பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

AHARAM
அகரம்

Des: Deltota Harees

தரம் 5 - 11 வரை

எண்: 09 எழுத்து: 02 பெப்ரவரி 2015

www.aharam.lk

கற்றலில் ஏற்படும் இடையூறுகள்

67வது சுதந்திர தினம்

மாதாந்த சிறுவர் சஞ்சிகை 50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஒரு முஸ்லிமுக்கு இன்னொரு முஸ்லிம் மீது ஆறு கடமைகள் இருக்கின்றன” என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியபோது நபித் தோழர்கள் “இறைத்தூதர் அவர்களே அவை யாவை? என வினவினார்கள்.” அதற்கு அண்ணலார் (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார் கள் :

1. நீங்கள் முஸ்லிம் சகோதரரைச் சந்தித்தால் அவருக்கு ஸலாம் சொல்லுங்கள்
2. உங்களை சகோதரர் ஒருவர் விருந்திற்கு அழைத்தால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.
3. உங்களிடம் ஒருவர் ஆலோசனை கேட்டால் அவர் நலம் நாடியவராக நல்ல ஆலோ சனையை வழங்குங்கள்.
4. ஒருவர் தும்மிவிட்டு அல்ஹம்துலில்லாஹ் கூறினால் அதற்குப் பதிலாக யர்ஹமுகல் லாஹ் என்று கூறிக் கொள்ளுங்கள்.
5. ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவரை நலம் விசாரிக்க செல்லுங்கள்.
6. ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய ஜனா ஸாவைப் பின் தொடருங்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 09, பெப்ரவரி: 2015, எழுத்து: 02

பிரதம ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

பொறுப்பாசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

சந்தா விபரம்

தனிப்பிரதி	50/-
1 வருட சந்தா	800/-
6 மாத சந்தா	400/-

தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி
கொழும்பு 09
தொ.பே : 076 670 4787
பெக்ஸ் : 011 268 6030
www.aharam.lk
E.mail: editor@aharam.lk

12 FEB 2015

உள்ளே...

கற்றலில் ஏற்படும் இடையூறுகள் 19


ஊனுண்ணித் தாவரங்கள் 04


67வது சுதந்திர தினம் 22


சமத்துவம், நீதி, நேர்மை: 34

11

38

07

பாடத்திட்டம்

புலமைப்பரிசில்	39	வரலாறு	16
கணிதம்	25	விஞ்ஞானம்	31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திர மனிதனின் வகிபாகமும் பணிகளும்

சுதந்திரம், ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கத் துடிப்பது. மனிதனுக்கு மனிதன் அடிமையாய் வாழ்வதை மனித மனம் அனுமதிப்பதில்லை. அது எந்த வடிவத்தில் இருந்தாலும் சரியே! தனி மனிதன் இன்னொரு மனிதன் மீதோ, ஒரு குடும்பம் மற்றொரு குடும்பத்தின் மீதோ, ஒரு குலம் பிறிதொரு குலத்தின் மீதோ, ஒரு சமூகம் மற்றைய சமூகத்தின் மீதோ, ஒரு நாடு அண்டைய நாட்டின் மீதோ என எந்த வகையான அடிமைத்துவமும் அந்தந்த அலகுகளால் நிராகரிக்கப் படுவது இயல்பானதே. அது மனித இயல்பும் கூட.

இந்த இயல்பின் அடிப்படையில் காலனித்துவ ஆட்சியிலிருந்த நாடுகள் தமது அடிமைத்துவத்தை நிராகரித்து சுதந்திரத்தை சுவாசிக்க விரும்பின. அந்த வரிசையில் எம் தாய்த்திருநாடான இலங்கையும் 1948 இல் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றதை நாமறிவோம்.

மனித சுதந்திரம் மறுக்கப்பட்டு, அதிகாரம் பிரயோகிக்கப்பட்டு, அடிமைத்துவம் நிலைநாட்டப்பட முயற்சிக்கப்படும் இடங்களில் சுதந்திர கோஷங்கள் எழுவது வரலாறு. இந்த வகையில் இலங்கையர்கள் அன்று அந்நிய ஆதிக்கத்திற்கெதிராக திரண்டெழுந்தனர். அவர்களின் அந்த போராட்டத்திற்கு வெற்றி கிட்டக் காரணம் என்ன தெரியுமா?

1. நாம் இலங்கையர் என்ற தேசப்பற்று.

எம்மிடமும் அத்தகைய தேசிய சிந்தனை வர வேண்டும். பிரதேச வாதங்களுக்கு அப்பாற்பட்டு நாம் சிந்திக்க வேண்டும். தேசிய நீரோட்டத்தில் நாம் கலக்க வேண்டும். அதில் காத்திரமான பங்களிப்பு நல்க வேண்டும்.

2. இது எமது தாய்த்திருநாடு என்ற ஐக்கிய உணர்வு.

இது எமது தாய் நாடு என்ற தாய் நாட்டு உணர்வு எம்மிடம் மேலோங்க வேண்டும். நாம் பிறந்து வளர்ந்து வாழும் நாட்டிற்கு பங்களிக்க நாம் ஒன்றிணைய வேண்டும்.

எமது முன்னோர்கள் அன்று போராடியதன் பலனாக எமக்கு சுதந்திரம் கிடைத்தாகிவிட்டது. இனி, எமது பணி எவ்வாறு அமைய வேண்டும்?

அடைந்த சுதந்திரத்தை ஆண்டாண்டு தோறும் கொண்டாடுவதுடன் எமது பணி முடிவடைந்து விடுமா? இல்லை, எமது சுதந்திர தேசத்தை அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற வேண்டும். சர்வதே ரீதியில் எமது தாய் நாட்டு சாதனைகள் நிகழ வேண்டும். அந்த முன்னேற்றத்திற்கு நாம் பங்களிக்க வேண்டும்.

சுதந்திரம் பற்றிய இந்தப் பார்வையின் இன்னொரு பகுதி இருக்கிறது. அதுவும் இணைகின்ற போதுதான் சுதந்திரம் பூரணப்படுத்தப்படும். அதுதான், சுதந்திரம் என்பது எமது வாழ்வோடு இணைந்தது. மரணம் தாண்டியும் பயணிப்பது. இந்த விடயத்தையும் நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் எம்மால் பூரண சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

மனித சுதந்திரம் என்பது எம்மை அனைத்துவித மான அடிமைத்துவத்திலிருந்து விடுவிப்பது என்று பார்த்தோம். அது சுதந்திரத்தின் ஒரு பகுதி. இது எப்படி சாத்தியமாகும் என்ற வினாவுக்கு விடை தேடும்போது இதனுடைய மற்றைய பகுதிக்கு விடை கிடைக்கும்.

மனிதன் சுதந்திரமுள்ளவன் என்ற யதார்த்தத்தின் பின்னணியில் அவன் அனைத்து சுதந்திரங்களையும் பெற்று, ஏன் வாழ்கிறேன், வாழ்வு முடிவுறுமா, அது முடிவடைந்த பின் எங்கே செல்வேன்... என்ற தொடரான கேள்விகளுக்கு விடை தேடும்போது அவனது சுதந்திரம் கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. எனவே, இவ் உலகிலுள்ள அனைத்து சக்திகளிடமிருந்தும் சுதந்திரம் பெற்ற மனிதன் அனைத்தையும் தாண்டிய சக்தியிடம் அடைக்கலம் பெறுகின்றான். தனது அடிமைத்துவத்தை அவனிடம் பறைசாற்றுகின்றான். அந்த சக்தி எது? அதுதான் அனைத்தையும் படைத்த அல்லாஹ்வின் வல்லமை.

எனவே, அந்த ஏக வல்லோனின் அடிமையாக வாழ்கின்றான் என்ற வகையில் இறைவனுக்கு அடிமையாக மாறுவதனூடாக மற்றைய அனைத்து அடிமைத் தளைகளிலிருந்தும் தன்னை விடுவித்து சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறான்.

சுதந்திரம் என்ற சிந்தனையை நாம் இந்த இரண்டு கண்ணோட்டங்களிலும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒன்று, மனிதன் அனைத்து அடிமைத் தளைகளிலிருந்தும் விடுபட்ட சுதந்திரவான். எனவே, அவன் அனைத்து விதமான அடிமைத்துவத்திலிருந்தும் விடுதலை பெறுகிறான்.

மற்றையது, அவன் ஏக இறைவனான அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிமை.

அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிமை என்கின்றபோது ஒருவிதமான சுதந்திர உணர்வு, ஒரு வித தைரியம், ஒரு வித நிம்மதியை அவன் அடைகிறான்.

எனவே, அனைத்து விதமான அடிமைத்தளைகளிலிருந்தும் விடுபட்ட, ஏக இறைவனுக்கு மாத்திரம் அடிமைகளாக மாறும் சுதந்திரத்தை புரிந்து கொள்வோம்; நடைமுறைப்படுத்துவோம். நல்ல பல மாற்றங்களை பாரினில் கொண்டு வருவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

"அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுறைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள், இறை விசுவாசி ஒரு பொந்தினுள் இரண்டு தடவைகள் தீண்டப்பட மாட்டான்." (ஸஹீஹுல் புஹாரி)

மேற்படி ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஓர் இறை விசுவாசியிடம் இருக்க வேண்டிய மகத்தான பண்பு களுள் ஒன்றை தத்ரூபமாக எடுத்துரைத்துள்ளதைக் காண்கின்றோம்.

அந்த குறித்த பண்புதான் ஒரு முஸ்லிம் தன்னி டம் காணப்படுகின்ற அலட்சியப் போக்கை இல்லா தொழித்து ஆளுமை உள்ளவனாக எப்போதும் இருக்க வேண்டும் என்பதாகும். அத்தோடு, அவன் அடிக்கடி ஏமாற்றப்படுபவனாக இருத்தல் கூடாது என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது.

ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்ட இறை விசு வாசி மீண்டும் அதே அமைப்பில் பாதிக்கப்பட மாட் டான். ஒரு மனிதன் மீள, மீள குறித்த ஒரு விடயத்தி னால் பாதிக்கப்படுகின்றான் என்றால் அவனிடத்தில் போதியளவு அறிவும் அதனால் ஏற்படும் ஆளுமை யும் இல்லை என்பதே அதன் பொருளாகும்.

ஒரு மனிதனது அறிவு அவனது ஆளுமை வளர்ச் சிக்கு துணை புரியக் கூடியதாய் அமைந்து காணப் படும். இந்நிலை இல்லாதவனே மேற்படி குறை பாட்டிற்கு உட்படுகின்றான்.

ஆளுமை என்பது மனிதனது உடல், உள்ளம், உணர்வு, சிந்தனை, அறிவு, ஆன்மா, நடத்தை மற்றும் பண்பாடு போன்ற அனைத்துடனும் தொடர்புபட் டது. இஸ்லாத்தின் பார்வையில் அறிவுத் திறன் ஒரு மனிதனின் ஆளுமையின் வளர்ச்சிக்கு துணை செய்து அவனை ஓர் உன்னத மனிதனாக உருவாக்குகின்றது.

அந்த வகையில் மாணவர்களாகிய நாம் மீண் டும் புதிய வருடத்தில் எமது கல்வி நடவடிக்கை களில் காலடி எடுத்து வைத்துள்ளோம். இப்போது நாம் காலெடுத்து வைத்திருக்கும் புதிய கல்வி ஆண் டுக்கான பல திட்டங்களை இப்போதே தீட்டிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் சென்ற வருடத்தில் விட்ட தவறுகளை அல்லது எமக்கு ஏற்பட்ட தோல்விகளை மீண்டும் சந்திக்காதிருக் கலாம்.

திட்டமிட்டு செயற்படுவதானது எமது மிகப் பெரிய ஆளுமைக்கான முதற்படியாகும். அல்குர் ஆன் நபி யூஸுப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் பதினைந்தாண்டு கால பொருளாதார திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளது. அதன் மூலம் எவ்வாறு எகிப் தும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் பெரும் பஞ்சத்திலிருந்து காப்பாற்றப்பட்டன என்பதையும் சுட்டிக் காட்டுகின்றது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் தனது கடந்த கால அனுப வங்களைக் கொண்டு எதிர்காலத்தை சிறந்த முறை யில் திட்டமிட்டு செயற்பட்டார்கள் என்பதற்கு நபி களாரின் ஹிஜ்ரத், ஹுதைபியா உடன்படிக்கை மற் றும் மக்கா வெற்றி என்பன சிறந்த உதாரணங்களா கும்.

அதேபோன்று, நபியவர்கள் தமது தோழர்களை யும் சிறந்த ஆளுமைமிக்கவர்களாக உருவாக்கினார் கள். அபூபக்கர் (ரழியல்லாஹு அன்ஹு), உமர் (ரழி யல்லாஹு அன்ஹு), உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) மற்றும் அலி (ரழியல்லாஹு அன்ஹு) போன்ற கலீபாக்களிடத்தில் காணப்பட்ட ஆளுமைப் பண்பு கள் இன்றும் புகழப்படுவதை காண்கின்றோம்.

கடந்த வருடத்தில் நாம் எமது வாழ்க்கையில் எதிர்கொண்ட தோல்விகளையும் நாம் கண்ட ஏமாற் றங்களையும் படிப்பினையாகக் கொண்டு அத்தகைய தோல்விகளை இனிமேலும் எமது வாழ்க்கையில் சந்திக்கக் கூடாது என உறுதி கொண்டு செயற்படு வோம். அப்போதுதான் எமது அறிவு ஆளுமைமிக்க தாக அமையும் என்பதை விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் புலப்படுத்துகின்றது.

எனவே, இறைவனால் எமக்கு வழங்கப்பட்டுள்ள வளங்களைக் கொண்டு எமக்குள்ள சவால்களை முறியடிப்பதன் மூலம் நாம் விடுகின்ற தவறுகளை திரும்பத் திரும்ப விட்டு அதனால் உளச் சோர்வு அடைவதிலிருந்து எம்மை நாம் காப்பாற்றி ஆளுமை யும், சாணக்கியமும் கொண்டவர்களாக மாற முற்ப டுவோம், இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com



ஊனுண்ணித் தாவரங்கள்

அல்குர்ஆனில் பல்வேறு இடங்களில் 54 வகையான தாவரங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் மூன்று வகை தவிர்ந்த மற்றைய அனைத்தும் பூமியில் காணப்படுகின்ற தாவரங்களாகும். அல்குர்ஆனில் தாவரங்கள் தொடர்பாக வருகின்ற வசனங்களை ஆராயுமிடத்து அவை தாவரங்களுக்கு உயிர், உணர்ச்சி இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. விஞ்ஞானமும் இதனையே கூறுகின்றது.

மனிதர்களைப் போன்று தாவரங்களுக்கும் சிந்தித்து உணரும் ஆற்றல் இருக்கின்றது என்ற ஓர் ஆய்வியல் தகவல் அண்மையில் பிளாண்ட் பயாலஜி என்ற சஞ்சிகையில் வெளியாகி இருந்தது. மட்டுமன்றி, அவை தமக்கிடையில் உரையாடுவதாகவும் பல்வேறு ஒலி சமிக்ஞைகளை வெளியிடுவதாகவும் அவ்வாய்வில் அறிவித்திருந்தனர். இதற்கு ஒரு கட்டுரையாளர் பின்வரும் அல்குர்ஆனிய வசனத்தைக் கூறி மனிதன் மட்டுமன்றி தாவரங்கள், மரங்கள், மலைகள் போன்ற அல்லாஹ்வின் இதர படைப்புகளுக்கும் சிந்தித்து முடிவெடுக்கின்ற ஆற்றல் இருக்கின்றது என்ற கருத்தை ஒரு கட்டுரையில் தெளிவுபடுத்தியிருந்தார். இதுதான் அந்த அல்குர்ஆனிய வசனம்:

''நிச்சயமாக வானங்கள், பூமி, மலைகள், என்பவற்றுக்கு (இரை) அமானிதத்தை சுமந்து கொள்ளுமாறு எடுத்துக் காட்டினோம். ஆனால், அதைச் சுமந்து கொள்ள அவை மறுத்தன. அதைப் பற்றி அவை அஞ்சின. ஆனால் மனிதன் அதைச் சுமந்தான். (ஆனால்) நிச்சயமாக மனிதன் அநியாயம் செய்பவனாகவும், அறிவிலியாகவும் இருக்கிறான்''

(சூரா: அஹ்ஸாப் 72)

தாவரங்கள் சிந்தித்து செயற்படுகின்றன என்பதற்கு தொட்டால் சிணுங்கி மற்றும் புழு, பூச்சிகளை உண்டு வாழும் ஊனுண்ணித் தாவரங்கள் மிகச் சிறந்த உதாரணமாகும். ஏனெனில், இவற்றின் செயற்பாடுகள் வெளிப்படையாகத் தெரிகின்றன. இத்தொடரில் ஊனுண்ணித் தாவரங்களில் உள்ள அற்புத இயல்புகள் பற்றி அறிந்து கொள்வோம்.

ஊனுண்ணித் தாவரங்கள்

புழு, பூச்சிகளை உண்டு வாழும் இத்தகைய தாவரங்கள் ஊனுண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணித் தாவரங்கள் (Carnivorous plant) என்றும் பூச்சி யுண்ணித் தாவரங்கள் (Insectivorous plants) என்றும் அழைக்கப்படுகின்றன.

இவை கடும் பனி, கடும் உஷ்ணம் தவிர்ந்த மற்றைய எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகின்றன. இவை கடல் மட்டத்திலிருந்து 1,000 அடி முதல் 10,000 அடி உயரம் வரையுள்ள பகுதிகளில் வளரக் கூடியன. ஈரப்பதன் மற்றும் அமிலத் தன்மை கொண்ட காடுகள், சதுப்பு நிலங்கள், ஆற்றங்கரைகள், குட்டை ஓரங்கள் போன்ற இடங்களில், இவ்வகைத் தாவரங்கள் அதிகமாக வளர்கின்றன. டோசோரியா வகையை சார்ந்த, பூச்சி உண்ணும் தாவரம் தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை உள்ளிட்ட நாடுகளில் அதிகமாகக் காணப்படுகிறது.

இவ்வகைத் தாவரங்கள் 6 குடும்பங்களைச் சேர்ந்தவை என்பதோடு, இவற்றில் 16 பேரினங்கள் காணப்படுகின்றன என்றும் இதுவரை ஆராய்ந்ததில் சுமார் 450 வகைச் செடிகள் இருப்பதாகவும் அவற்றில் 30க்கும் மேற்பட்டவை கலப்பினச் செடிகள் என்றும் தாவரவியல் ஆய்வாளர்கள் ஒரு பட்டியலைத் தருகின்றனர். இவை சுமார் 100 வருட ஆயுளைக் கொண்டவை.

உணவு முறை

பொதுவாக தாவரங்கள் நீரையும், காபனீரொட்சைட்டையும், சூரிய ஒளியையும், கனியுப்புக்களையும் பயன்படுத்தி உணவுற்பத்தி செய்வதுதான் வழக்கம். ஆனால், அவற்றிலிருந்து வித்தியாசமாக இரைகளை உண்டு உயிர் வாழும் முறையை அல்லாஹ் இத்தாவரங்களுக்குக் கொடுத்துள்ளான். எனவே இவை அசைவ (Non veg) தாவரங்களாகும். ஈ, எறும்பு, தேனீ, தும்பி, சிலந்தி போன்ற கணுக்காலிப் பூச்சிகளையும் நத்தை, தவளை, பல்லி, எலி போன்ற ஜந்துக்களையும் இவை இரையாக்கிக் கொள்கின்றன.

தமது உயிர் வாழ்க்கைக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள், அதிலும் குறிப்பாக நைட்ரஜன் மிகவும் குறைவான மண்ணில், சதுப்பு நிலங்களில் இத்தாவரங்கள் அதிகம் வளர்கின்றன என்பதால் தமது உயிர் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நைட்ரஜனை இவை பூச்சிகளின் உடலில் உள்ள புரதத்தில் இருந்து பெற்றுக் கொள்கின்றன. இதற்காகத்தான் இவை இரைகளை வேட்டையாடுகின்றன. தாவரவியல் அறிஞரான பேராசிரியர் ஹூக்கர் (J.D.Hooker) என்பவர், ''பூச்சிகளை செரிக்கச் செய்யும் செயல்முறையானது விலங்குகளைப் போல இத்தகைய தாவரங்களிலும் நடக்கிறது. மனிதனின் வயிற்றில் சுரக்கும் நொதியங்கள் போல தாவரங்களிலும் நொதியங்கள் சுரக்கின்றன'' என்கிறார்.

பூச்சிகளைப் பிடிக்கும் பொறிமுறை

இத்தாவரங்கள் பூச்சிகளைப் பிடிக்கப் பின்பற்றும் முறைகள் மிகவும் வியப்பானவை. கண்டறிந்துள்ள அனைத்துத் தாவரங்களையும் ஆராய்ந்ததில் அவை இரைகளைப் பிடிக்க முக்கியமாக ஐந்து பொறிமுறைகளைத் தம்வசம் கொண்டுள்ளன. இரைகளைப் பிடிக்கும் அமைப்பை வைத்து இத்தாவரங்களையும் ஐந்தாக வகைப்படுத்தலாம்.

1. *Pitfall traps*

இதனை குழி அமைப்பிலான பொறிமுறை என்று குறிப்பிடலாம். சில தாவரங்களது உடல் பெரிய அளவில் கிணறு போன்று அமைந்திருக்கும். அத்தோடு, மேலால் மூடி போன்ற பகுதியொன்றும் திறந்திருக்கும். அதன் வாய் விளிம்புப் பகுதி இரைகளைக் கவரும் நிறத்தில் இருப்பதோடு விளிம்பில் சுவையான தேனும் இருக்கும். இதனைப் பருக வரும் இரை ஆரம்பத்தில் தேனில் சுவை கண்டு அதன் பின் குழிக்குள் இறங்க ஆரம்பிக்கும். ஆனால் அவற்றின் அடிப் பகுதியில் இருப்பது உணவைச் செரிக்கச் செய்யும் ஆபத்தான நொதியங்களும் பக்டீரியாக்களுமாகும்.

இதனை அறியாது விளிம்பில் இருந்து சற்று உள்ளே காலை வைத்ததுதான் தாமதம் அதன் சுவற்றில் இருக்கும் வழுவழுப்பான தன்மையால் வழுக்கி இரை நொதியத்தில் வீழ்ந்துவிடும். அதோடு, மேலே இருக்கும் மூடி அதன் வாயை அடைத்து இரை வெளியே வராத வண்ணம் செய்துவிடும். இனி இரை அந்த நொதியத்தில் மூழ்கி, கரைந்து இறந்து இரையாகிவிடும். இதற்கு Pitcher plant வகைத் தாவரங்கள் சிறந்த உதாரணம்.

Heliamphora chimantensis | Darlingtonia californica | Pitcher plant | Brocchinia reducta

2. *Fly paper traps*

இந்த வகைத் தாவரங்களின் இலைகளில் ஒரு வகையான ஒட்டும் தன்மை வாய்ந்த பிசின் அல்லது பசை காணப்படுகின்றது. இவை சிறு சிறு பூச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கவர்ந்து இழுத்து இரையாக்கிக் கொள்ளும். பார்ப்பதற்கு அழகாக மினு மினுப்புடனும் நல்ல நறுமணத்துடனும் இருப்பதால் சிறிய பூச்சிகள் இவற்றை நாடி வரும். தலைகளையும் இவை பிடித்துக் கொள்ளும். இவற்றின் இலைகளில் இரை வந்து அமர்ந்ததும் மேற்பரப்பில் இருக்கும் பசையில் ஒட்டி நகர முடியாமல் தடுமாறும்போது தாவரத்தின் இலை இரையை அப்படியே சுருட்டிவிடும். பின்னர் சாற்றை உறிஞ்சிவிட்டு சக்கையை கீழே போடும். இதற்கு sundews வகைத் தாவரங்கள் சிறந்த உதாரணம்.



Drosera rotundifolia Sundew Plant Drosera tokaiensis Pinguicula

3. *Snap traps*

இலைகளை வேகமாக அசைத்து மூடி இரைகளை சிறைப்பிடிக்கும் ஊனுண்ணித் தாவர வகையை இது குறிக்கும். இவ்வகைத் தாவரங்கள் தமது இலைகளை இரண்டு பகுதிகளாகத் திறந்து வைத்திருக்கும். அதன் உட்பகுதி சிவப்பு, இளஞ்சிவப்பு நிறங்களில் கண்களைக் கவரும் விதத்தில் அமைந்திருக்கும். அது மட்டுமன்றி, மெல்லிய உணர்ச்சிக் கொம்புகள் மத்தியில் நீண்டிருக்கும். இனி இத்தாவரங்களின் அழகில் மயங்கி ருசிக்க வரும் பூச்சிகள், வெட்டுக்கிளிகள் அவற்றில் ஊர்ந்து செல்லும்போது உணர்ச்சிக் கொம்புகளில் பட்டுவிட்டால் போதும் உடனே இரண்டாகப் பிரிந்துகிடந்த இலைகள் நடுவே இரையை வைத்து நசுக்கி மூடிக்கொள்ளும். அவற்றால் வெளியேற முடியாது அதுக்குள்ளே அகப்பட்டு இரையாகிவிடும். இதற்கு (Venus flytrap (Dionaea muscipula) மற்றும் waterwheel plant (Aldrovanda vesiculosa) என்பவை உதாரணங்களாகும்.



Venus flytrap (Dionaea muscipula) waterwheel plant (Aldrovanda vesiculosa)

4. *Bladder traps*

நீரை அண்டி வாழும் இத்தாவரங்களின் உடலில் காற்றுப் பை போன்ற நிறைய பைகள் இருக்கும். இத்தாவரங்களில் இரைகள் சிக்கியதும் அவற்றைச் சுற்றி தமது உறிஞ்சும் உறுப்புகளை அதில் பதித்து ஒருவகை அமிலத்தை உடலில் செலுத்தி உறிஞ்சி உணவாக்கிக் கொள்கின்றன. Utricularia vulgaris என்ற தாவரம் இதற்கு உதாரணமாகும்.



Utricularia vulgaris,

5. *Lobster-pot traps*

இவை மிக நுண்ணிய வகையான இரைகளை மாத்திரம் உணவாகக் கொள்கின்றன. எளிதில் காண்பதும் கடினம். செரிமான உறுப்புக்கு இரையைச் செலுத்தும் வண்ணம் உள்நோக்கிய முட்களை பயன்படுத்தி இரைகளைப் பிடிக்கும்.

இதுபோன்ற பொறிமுறைகளை வைத்து இத்தாவரங்கள் இரைகளைப் பிடித்து உண்டு வாழ்கின்றன. இவ்வகையான தாவரங்கள் அச்சம் தரக்கூடிய பல ஆங்கிலத் திரைப்படங்களுக்குக் (English Horror Films) கருவாகவும் அமைந்துள்ளன.

உண்மையில் இத்தாவரங்களின் செயற்பாடுகள் ஆய்வாளர்களை மட்டுமன்றி, பார்ப்போரையும் வியப்பில் ஆழ்த்தும் நடைமுறையைக் கொண்டுள்ளன. தாவரங்களுக்கு உயிர் இருப்பதோடு உணர்வும் இருக்கின்றது என்பதை தெளிவாகவே இவ்வகைத் தாவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. தாவரங்களும் இறைவனைத் துதிக்கின்றன என்ற உண்மையை விளங்கிக் கொள்ள இதுவொன்றே போதுமான ஆதாரமாகும்.

''வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், பிராணிகளும், மனிதர்களில் பெரும்பாலானவர்களும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்கின்றன என்பதை நீர் பார்க்கவில்லையா? ஏழு வானங்களும், பூமியும், அவற்றில் உள்ளவைகளும் அல்லாஹ்வை துதி செய்கின்றன. இன்னும் அல்லாஹ்வைப் புகழ்ந்து துதி செய்யாத பொருள் எதுவும் இல்லை. எனினும் அவற்றின் துதி செய்வதை நீங்கள் உணர்ந்து கொள்ள மாட்டீர்கள். நிச்சயமாக அவன் பொறுமையுடையவனாகவும் மிக மன்னிப்பாளனாகவும் இருக்கின்றான்.'' *(சூரா: பனீ இஸ்ராயீல் 44)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குர்ஆனின் சிறப்புப் பெயர்கள்

- அல்புர்கான் - நன்மை தீமையை பிரித்தறிவிப்பது
- அல்கிதாபு - வேத நூல்
- அல்பயான் - தெளிவுரை
- அல்முபீன் - தெளிவுபடுத்தக் கூடியது
- அல்ஹக்கு - சத்தியமானது
- அத்திக்ரு - நினைவுறுத்துவது
- அல்கரீம் - கண்ணியத்துக்குரியது
- அல்ஹகீம் - ஞானம் நிறைந்தது
- அல்அஜிஸ் - மதிப்பிற்குரியது
- அல்பஸாயிர் - ஆதாரமுள்ளது
- அல்முஸத்திக் - உண்மையாக்கி வைக்கக் கூடியது
- அல்மர்ஃபூஆ - உயர்வானது
- அத்திக்ரா - நினைவூட்டும் உபதேசம்
- அல்முதஹ்ஹரா - பரிசுத்தமாக்கப்பட்டது
- அல்ஹுக்மு - சட்டம்
- அந்நதிர் - அச்சுறுத்தி எச்சரிப்பது
- அல்பஷீர் - நற்செய்தி கூறுவது
- ஹப்லுல்லாஹ் - அல்லாஹ்வின் கயிறு
- அல்முபாரக் - புனிதமாக்கப்பட்டது
- அத்தன்ஜில் - இறக்கி வைக்கப்பட்டது
- அர்ரூஹ் - உயிருள்ளது
- அந்நிஃமத் - அருட்கொடை
- அல்ஹுதா - நேர்வழி

முஸ்னா மஹ்ரூப்
கனமூலை, மதுரங்குளி

- அர்ரஹ்மத் - அருள்
- அஷ்ஷிஃபா - நிவாரணமளிப்பது
- அல்மவ்இளத் - நல்லுபதேசம்
- அல்ஹிக்மத் - ஞானம்
- அல்கய்யிம் - உறுதியானது
- அந்நூர் - ஒளி
- அல்மஜித் - மேன்மைக்குரியது
- அந்அஜப் - ஆச்சரியமானது
- அல்முகார்மா - சங்கைக்குரியது
- அல்முகைமின் - பாதுகாவலராய் இருப்பது



கோள்கள் மற்றும் விண்வெளி பற்றிய தகவல்கள்

01. தொலைவில் உள்ள கோள், எதிர்ப்பக்கமாகச் சுற்றும் கோள், பச்சைக்கோள் - யுரேனஸ்
02. நீண்ட பகல், குறுகிய இரவு - ஜூன் 21
03. பூமியின் எல்லாப் பகுதிகளிலும் மிகச் சரியாக 12 மணி நேரங்கள் சூரிய வெளிச்சம் உள்ள நாள் - மார்ச் 21
04. கோள்களின் பெயரை கிழமைக்கும் வைத்தவர்கள் - எகிப்தியர்
05. பூமியதிர்ச்சிக்கான காரணம் - ரெக்ரோனிசம்
06. சூரிய மண்டலத்தை தாண்டிச் சென்ற ஒரே ஒரு கோள் - பயணியம்
07 உலகின் முதலாவது தகவல் தொடர்பு செயற்கைக் கோள் - டெல்ஸ்ரார் (அமெரிக்கா)
08. கிரகங்களின் சுழற்சியை ஆராய்ந்தவர் - கெப்ளர்
09. சந்திர கிரகண நீடிப்புக் காலம் - 7 நிமிடம் 31 விநாடி
10. பூமி சூரியனுக்கு தொலைவில் செல்லும் மாதம் - ஜூலை

அ.ஹ. வஜீஹா பேகம்
தரம் 09
கமு/ புலவர்மணி ஷரிபுத்தீன் வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையும் தென்னிந்திய ஆக்கிரமிப்புகளும்

படையெடுப்பாளர்கள்	இலங்கை மன்னர்கள்	விளைவுகள்
சேனன், குத்திகன்	சூரதிஸ்ஸ	22 வருட ஆட்சி
எல்லாளன்	அசேலன்	44 வருட ஆட்சி
பூலகத்தனின் 7 தமிழர்கள்	வலகம்பா	14 வருட ஆட்சி
பீடியனின் 6 தமிழர்கள்	மஹா சேனன்	27 வருட ஆட்சி
சிறிமாற சிறி பல்லவன்ன	1 ஆம் சேனன்	-
1 ஆம் பாரந்தக சோழன்	2 ஆம் உதயன்	-
3 ஆம் கிருஷ்ன ராட்ச சோழன்	4 ஆம் மஹிந்தன்	-
இராஜ இராஜ சோழன்	5 ஆம் மஹிந்தன்	77 வருட ஆட்சி
1 ஆம் இராஜேந்திர சோழன்	5 ஆம் மஹிந்தன்	
கலிங்க மாகன்	பராக்கிரம பாண்டியன்	40 வருட ஆட்சி

எம்.எஸ். அஷ்பாக் ஜாவித்
கமு / அல் மனார் மத்திய கல்லூரி
மருதமுனை

பெற்றோருக்கு நாம்...

ஹுமைத் மஹ்ரூப்
தரம் 11
அரபா தேசிய பாடசாலை
வெலிகம

- நாம் பெற்றோருக்கு அன்பும், மரியாதையும் செலுத்தி வாழ வேண்டும்.
  அவர்கள் எம்மை சிறுவயதிலிருந்து கருணை காட்டி வளர்ப்பதற்காக.
- எந்தவொரு இக்கட்டான சூழ்நிலையிலும் அவர்களுக்கு நாம் உதவ வேண்டும்.
  அவர்கள் எம்மை பாதுகாப்பான முறையில் வளர்ப்பதற்காக.
- அவர்களின் சொல்லுக்கு மதிப்பளிக்க வேண்டும்.
  அவர்கள் எங்களின் விருப்பங்களை நிறைவேற்றி வளர்ப்பதற்காக.
- அவர்களுடன் அன்பாகக் கதைக்க வேண்டும்.
  அவர்கள் சிறுவயதில் எம்முடன் கொஞ்சி விளையாடியதற்காக.
- அவர்களுக்கு 'சீ' என்று கூட சொல்லக் கூடாது.
  அவர்கள் எம்மை ஒரு செல்வமாகக் கருதி வளர்ப்பதற்காக.
- அவர்களுக்கு துஆக்கள் பல செய்ய வேண்டும்.
  அவர்கள் எம்மை ஸாலிஹான பிள்ளையாக வளர்ப்பதற்காக.
- நாம் அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுக் கொள்ள வேண்டும்.
  அவர்கள் சுவனத்திற்கு அழைத்துச் செல்வதற்காக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா விடை





எம்.என்.எம். அஸான்
தரம் 9
அக்/மின்ஹாஜ் ம.வி.
பாலமுனை

1. கதம்ப நதி என அழைக்கப்படும் நதியின் தற்போதைய பெயர் என்ன? மல்வத்து ஓயா
2. இன்சுலினைக் கண்டுபிடித்தவர் யார்? அலக்சாண்டர் கிரகம்பல்
3. சர்வதேச ஜனநாயக தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது? செப்டெம்பர் 15
4. ''ஜேம்ஸ் புருஸ்'' எனும் நீர்வீழ்ச்சி எந்த நாட்டிலுள்ளது? கனடா
5. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி யார்? வில்லியம் கோபல்லாவ
6. கடல் மட்டத்திற்கு கீழேயுள்ள நாடு எது? நெதர்லாந்து
7. வீட்டுப் பாதுகாவலுக்கு ரோபோக்களை அறிமுகப்படுத்திய நாடு எது? ஜப்பான்
8. எபோலா வைரஸ் முதன் முதலாக எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது? ஆபிரிக்கா
9. குகை ஓவியங்களுக்குப் பெயர் போன பிரதேசம் எது? தம்புள்ளை (சீகிரியா)
10. தேசிய கல்வி ஆணைக்குழு உருவாக்கப்பட்ட ஆண்டு எது? 1990 ஆம் ஆண்டு

விசேட பெயர்கள்

- நைல் நதியின் கொடை
  - எகிப்து
- ஐரோப்பாவின் நோயாளி
  - துருக்கி
- இரண்டாம் கண்டம்
  - ஆபிரிக்கா
- உலகின் கூரை
  - திபெத்
- ஆறுகள் இல்லாத நாடு
  - சஊதி அரேபியா
- புனித பூமி
  - ஜெருசலம்
- யுத்தம் இல்லாத நாடு
  - சுவிட்சர்லாந்து
- உலகின் சர்க்கரைக் கிண்ணம்
  - கியூபா
- ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு
  - பின்லாந்து
- நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு
  - நோர்வே

எம்.எல். ஸைனப் ஸாபீர்
தரம் 06
கு/ குறு/ அரபா மு.ம.வி.

இப்படி இருக்க கூடாது

- நாம் உணர்ச்சிவசப்படுபவர்களாக இருக்கக் கூடாது.
- தோல்வியில் மனம் தளரக் கூடாது.
- வெற்றியில் செருக்கடைய கூடாது.
- எந்தக் காரணத்தை முன்னிட்டும் நேர்மை தவறக் கூடாது.
- மற்றவர்கள் துன்பத்தில் இன்பம் காணக் கூடாது.
- பிறர் முன்னிலையில் நண்பர்களை அவமதிக்கக் கூடாது.
- தொட்டால் சுருங்கியாக இருக்கக் கூடாது.

பாத்திமா அப்ரா சனூன்
தரம் 5
அல் மினாரா பாடசாலை
பலாங்கொடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஞாயிற்றுத் தொகுதி

- ஞாயிற்று தொகுதி என்றால் என்ன?
  சூரியனும் அதை சுற்றி வரும் வான் பொருட்களும் ஒருங்கே ஞாயிற்று தொகுதி எனப்படும்.
- எமது ஞாயிற்று தொகுதி எங்கு காணப்படும்?
  பால் வீதி எனப்படும் வெள்ளுடுத் தொகுதியில் காணப்படும்.
- ஞாயிற்று தொகுதியில் காணப்படும் பொருட்கள் எவை? வான் பொருட்கள், வால் நட்சத்திரங்கள்.
- ஞாயிற்று தொகுதியில் காணப்படும் கோள்கள் எத்தனை? 8
- ஞாயிற்று தொகுதியில் காணப்படும் மிகப் பெரிய கோள் எது? சூரியன்
- துணைக் கோள் இல்லாத கோள் எது? புதன்
- வெள்ளிக் கோளின் வேறு இரு பெயர்களை தருக? விடிவெள்ளி, மாலை வெள்ளி
- வெள்ளிக் கோளில் காணப்படும் இரு வாயுக்களையும் தருக? நைதரசன், ஒட்சிசன்
- வியாழனின் வளிமண்டலத்தை ஒத்த கோள் எது? சனி
- 27 துணைக் கோள்களை கொண்ட கோள் எது? யுரோனஸ்

எம்.எம். அஸ்மா
தரம் 8
தெஹியங்க அல் அஸ்ஹர் ம.க.

வாழ்வை உணர்ந்தவனின் வைர வரிகள்



கலீல் ரஹ்மான் ரிஸ்வியா
இறுதி வருடம்
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.

- வெற்றி பெற வேண்டும் என்ற பதற்றம் இல்லாமல் இருப்பதுதான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி.
- இறைவன் உனக்கு வெற்றியை அருளுவதற்கு முன்பு, நீ பெறும் அந்த பரிசைக் கையாளும் பணிவு உன்னிடம் இருக்கிறதா என்பதை நீ நிரூபித்தாக வேண்டும்.
- உனது எல்லா நாள்களிலும் தயாராக இரு. எவரையும் சம உணர்வோடு சந்தி. நீ பட்டறைக் கல்லானால் அடி தாங்கு. நீ சுத்தியலானால் அடி!
- நாள் முழுவதும் கணத்திற்கு கணம் நேர்மையாய், துணிவாய், உண்மையாய் உழைக்கின்றவன் கரங்களே அழகிய கரங்கள்.
- காலத்தின் மணல் பரப்பில் உன் காலடிச் சுவடுகளை பதிக்க விரும்பினால் உன் பாதங்களை இழுத்து இழுத்து நடக்காதே!
- தாங்கள் விரும்பியது எதுவானாலும் அதை அடைவதற்கு சிலர் கவனத்துடன் விரைந்து முன்னேறுகின்றனர். மற்றவர்கள் நின்ற இடத்திலேயே அடியெடுத்து வைக்காமல் பாதத்தை அசைத்துக் கொண்டிருக்கின்றார்கள். தங்களுக்கு என்ன தேவை என்பதையும் அதை எப்படி கண்டு கொள்வதென்பதையும் அறியாதவர்கள் இவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ENGLISH WITH Miss. Aysha Hassan

Assalamu alaikum dear friends,



Hope all of you are still fresh, regarding the decisions you made for the New Year. Yeah! With the same spirit, come on let's check out something exciting...

Let me do a small operation.....hey! Cool! This operation, unlike any other operations, is not painful at all. What I'm going to do is to check how polite my friends are. What you've to do is just keep on marking (✔) for the truths about you and (×) for the fake information of you. So, shall we start up?

1. You reply to the Salaam offered by someone.
2. You don't frown often but keep smiling.
3. You say "jazakallah" when someone favours you and "Barakallah" when you favour someone.
4. You inquire about each other's health when you meet people.
5. You say "Fee Amaanillah" when someone bids farewell to you.
6. You never use harsh or abusive words, even when you are angry.
7. You often use a soft tone of speech, especially in front of the elders.
8. You don't panic, but say "Mashaa Allah" when you glance at or hear something exciting.

Mmmm... ready to check out your scores? Okay! Come with me.

Look in to your scores based on the number of (✔) marks and (×) marks you got.

7 – 8 – Brilliant	5 – 6 – Awesome
3 – 4 – Good	1 – 2 – Oops! Work more!

Do you know? Our prophet (sal) was very polite and this trait of him made it simple for him to win the hearts of many people. Politeness works as a magic, to turn people friendly and positive towards us. Not only that, being polite will bring us loads of merits as well, as it's the sunnah of our prophet (sal).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Laugh a while

First fool : *I want to buy the Thaj Mahal.*
Second fool : *You can't.*
First fool : *Why not?*
Second fool : Because I won't sell it to you!



Animal facts

Did you know that Whales sing? Yes, they do sing in a pattern of sounds as they move slowly through the water. By itself, the whale is a unique mammal – its size (a blue whale can be over a 100 feet long) is awe inspiring. Whaling, like fishing is carried on many waters, except in some areas where it is banned. Even then, the numbers of many whale species are decreasing. Today, the whales may just be wailing, "Help!" instead of singing a cheery song.

Courtesy: Gokulam

Your Corner

My guide



You are my guide
Need forever at my side
You showed me the right path,
When I asked where to go.

You understand my fears
And, consoled me always

You are a gift from my God
You are a friend to my soul

I recite you every day
With the thankful heart
That's you "holy Quran"

Fazra Fareed
Hemmathagama

Some golden words

- Talk slowly, but think quickly
- Give people more than they expect and do it cheerfully
- If you win: you need not to explain, but if you lose you should not be there to explain
- Black color is sentimentally bad. But, every black board makes the students life bright.
- One best book is equal to hundred good friends. But, one good friend is equal to a library
- Nothing is impossible to a willing heart
- Write your sad time in sand; write your good times in stones.

M I FathimaAmrin
Grade 10
Km/Shams Central College
Maruthamunai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The job I like the most

I would like to be a doctor. It is the noblest profession of the world. If I become a doctor I will be able to serve the general public well. Becoming a doctor is not an easy task. We have to score high marks at the GCE (A/L) examination in the stream of Bio – science. The duration of the course is five or six years. Today there is a great completion in our country to enter the medical faculty. There for, we have to study hard to reach the goal.

As a doctor I will have to spend most of my time with patients. Thousands of patients would come to meet me. I have to be tolerant. I have to be kind hearted all the time; medicine is not only a treatment. Doctors should speak with patients using kind words. Being a doctor is more of a service than a profession. A doctor is respected by all. That is why I like to become a doctor.

MNF Nuha
Grade 11
NK/Pannawa Muslim Central College
Pannawa, Kobeigane.

FathimaAfraSanoon
Grade 5 – C
Al – Minaravidhyalaya
Balangoda

Early morning

Early in the morning
Out came the sun
Smiling and shining
For everyone.
Wake up children!
Come and have fun!
Lazy little girls and boys!
Will have nons!

I'm eagerly waiting for your contributions with comments, stories,- poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி)

مَا هِوَايَتُكَ

اَلْمُدَرِّسُ : مَا هِوَايَتُكَ يَا حَسَنَ؟

ஆசிரியர் : ஹஸனே உனது பொழுதுபோக்கு என்ன?

حَسَنُ : هِوَايَتِيْ الرَّسْمُ وَهَذِهِ رُسُوْمَاتِي

ஹஸன் : வரைதல் எனது பொழுதுபோக்காகும். இவை எனது சித்திரங்கள்.

المدرس : هذه رسومات جميلة أنت رسّام جيد يا حسن

ஆசிரியர் : இவை அழகான சித்திரங்கள். ஹஸனே நீ ஒரு சிறந்த ஓவியன்.

حسن : ما هوايتك المفضّلة يا أستاذ

ஹஸன் :- ஆசிரியரே உங்களது விருப்பத்துக்குரிய பொழுதுபோக்கு என்ன?

المدرس : هوايتي المفضلة قراءة الكتب

ஆசிரியர் :- எனது விருப்பத்துக்குரிய பொழுதுபோக்கு புத்தகங்கள் வாசிப்பதாகும்.

المدرس : ما هوايتك المفضلة يا عبد الله

ஆசிரியர் :- அப்துல்லாஹ் உங்களது விருப்பத்துக்குரிய பொழுதுபோக்கு என்ன?

عبد الله : هوايتي المفضلة جمع الطوابع

அப்துல்லாஹ் :- எனது விருப்பத்துக்குரிய பொழுதுபோக்கு முத்திரை சேகரிப்பதாகும்.

ما هواية حسن؟ ஹஸனின் பொழுதுபோக்கு என்ன? ....

ما هواية عبد الله؟ அப்துல்லாஹ்வின் பொழுதுபோக்கு என்ன? ....

ما هواية المدرِّس؟ ஆசிரியரின் பொழுதுபோக்கு என்ன? ....

فَضَّلَ - விரும்பினான்

ما هوايتك المفضلة؟ هوايتي المفضلة ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்பந்து விளையாடுதல்	____________	لعب كرة القدم
முத்திரை சேகரித்தல்	____________	جمع الطوابع
மீன் வளர்ப்பு	____________	تربية الأسماك
வரைதல்	____________	الرسم
பத்திரிகை வாசித்தல்	____________	قراءة الصحف
தொலைக்காட்சி பார்த்தல்	____________	مشاهدة التلفاز
வானொலி கேட்டல்	____________	الإسماع الي الراديو

01.	இந்தப் பாடம் இலகுவானது	هذا الدرس سهل
02.	இந்தப் பாடம் எவ்வளவு இலகுவானது	ما أسهل هذا الدرس
03.	இந்த மாணவி சுறுசுறுப்பானவள்	هذه الطالبة نشيطة
04.	இந்த மாணவி எவ்வளவு சுறுசுறுப்பானவள்	ما انشط هذه الطالبة
05.	இந்தப் பாடசாலை பழமையானது	هذه المدرسة قديمة
06.	இந்தப் பாடசாலை எவ்வளவு பழமையானது	ما أقدم هذه المدرسة
07.	இந்த மனிதன் குட்டையானவன்	هذا الرجل قصير
08.	இந்த மனிதன் எவ்வளவு குட்டையானவன்	ما أقصر هذا الرجل
09.	இப்பரீட்சை கஷ்டமானது	هذا الإمتحان صعب
10.	இப்பரீட்சை எவ்வளவு கஷ்டமானது	ما أصعب هذا الإمتحان
11.	இந்த நாடு அழகானது	هذا البلد جميل
12.	இந்த நாடு எவ்வளவு அழகானது	ما أجمل هذا البلد

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு

தரம் 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

தரம் - 10

01.

i. இலங்கையின் இலக்கிய மூலாதாரங்களுள் தூது காவியம், புகழ் காவியம், போர்க் காவியம் என்பன முக்கியம் பெறுகின்றன.

இவற்றுக்கு தலா ஒன்று வீதம் உதாரணம் தருக?

ii. கல்வெட்டுக்கள் மூலம் கிடைக்கும் 4 பயன்கள் தருக.

iii. தொல்பொருள் மூலாதாரங்களைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டை விளக்குக.

iv. வரலாற்றைக் கற்பதனால் ஏற்படும் பயன்கள் மூன்றை விளக்குக.

விடைகள்

i.

1. தூது காவியம் - மயுரசந்தேசிய
2. புகழ் காவியம் - பெரகும்பா சிரித்த
3. போர்க் காவியம் - சீதாவாக்க சட்டன

ii.

1. இலக்கியங்களில் உள்ள தகவல்களை உறுதிப்படுத்த கல்வெட்டுக்கள் உதவுகின்றன.
2. வர்த்தக சந்தை பற்றி பதுளை தூண் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.
3. துறைமுக வரி சம்பந்தமாக கொடவாய தூண் கல்வெட்டு கூறுகின்றது.
4. நீதிமன்ற வருமானம் விகாரைக்கு உரியது என்று சித்துல்பந்து கல்வெட்டு கூறுகின்றது.

iii.

1. மக்களுக்கு அறிவுறுத்தல்

எமது வரலாற்றுத் தகவல்களை அறிந்து கொள்ள வரலாற்று மூலாதாரங்களே உதவுகின்றன. உள்நாட்டு உல்லாசப் பிரயாணிகளினதும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளினதும் கருத்தை கவர்வனவாக வரலாற்றுச் சின்னங்கள் அமைகின்றன. இச் சின்னங்கள் வானிலை செயற்பாடுகளாலும், மனித நடவடிக்கைகளினாலும் வேகமாக அழிவடைந்து வருகின்றன. பல விகாரைகளும் சிலைகளும் மழையாலும் வெயிலாலும் அழிவடைகின்றன. பொதுமக்களும் வரலாற்றுச் சின்னங்களை அழிக்கின்றனர். ''வரலாற்றுச் சின்னங்களை தொடுதல், அவற்றில் எழுதுதல், அவற்றுக்கு அருகே கழிவுகளைப் போடுதல் போன்றவற்றை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்'' என்று எழுதப்பட்ட அறிவித்தல் பலகைகளை வரலாற்று முக்கியமான இடங்களில் அமைத்தல் வேண்டும்.

2. தொல்பொருள் காணப்படும் பிரதேசங்களை பாதுகாத்தல்.

எமது வரலாற்றுச் சிறப்புக்களை அறிந்து கொள்வதற்கு தொல்பொருள் மூலாதாரங்கள் பெரிதும் உதவுகின்றன. எனவே, தொல்பொருள் மூலாதாரங்களையும், அவை காணப்படக் கூடிய பிரதேசங்களையும் பாதுகாப்பது எமது தேசியக் கடமை. இரத்தினபுரி மாவட்டத்தில் 'உடரஞ்சா மடம்' என்ற இடத்தில் அகழப்பட்ட பல தொல்லியல் மூலாதாரங்கள், முன்வரலாற்றுக் காலத்தைப் பற்றி நாம் அறிந்து கொள்ள பயன்படுகின்றன. இப்பிரதேசத்திற்கு மேலாக வீதிகள் அல்லது கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தால் இன்று இம்மூலாதாரங்களை நாம் பெற்றிருக்க முடியாது. எனவே, தொல்பொருள் மூலாதாரங்களையும், அவை காணப்படக் கூடிய இடங்களையும் பாதுகாப்பது எமது கடமையாகும்.

iv.

1. எதிர்காலத்தை சிறப்பாக்குதல்

இறந்தகால அடிப்படையிலேயே அதன் விளைவுகளும் காணப்படுகின்றன. இவை எமது வாழ்க்கைக்கு சிறந்த படிப்பினைகளாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றைக் கற்கும் ஒருவர் தனக்குரிய பிரச்சினையையும் அதற்குரிய தீர்வையும் கண்டு கொள்வார். பண்டுகாபயன் திட்டமிட்டு அனுராதபுரத்தை நிர்மாணித்து நகரை சுத்தம் செய்ய 500 பேரை நியமித்தான். வரலாற்றைப் படிக்கும் ஒருவர் தனது வாழ்க்கையில் திட்டமிடலுக்கு முக்கியத்துவம் கொடுப்பார். வரலாறு கற்கும் ஆட்சியாளர்கள் தமது நகரங்களை தூய்மையாக வைத்திருப்பார்கள்.

2. மாற்று கலாசாரத்தை நேசித்தல்

இலங்கை பல்இன, பல்கலாசாரம் கொண்ட ஒரு நாடாகும். இலங்கையில் சமாதானம் நிலவ வேண்டுமானால், மாற்றுக் கலாசாரங்களை மதிக்கும் பண்பு மக்களிடையே வளர வேண்டும். வரலாறு பாடம் மாற்றுக் கலாசாரத்தை மதிக்கும் பண்பை வளர்க்கின்றது. பண்டுகாபயன் பல இனத்தவர்களுக்கும் வணக்கஸ்தலங்களை அமைத்தான். உதாரணமாக: கொல்லர்களின் தெய்வமாகிய 'கம்மார தேவ' என்ற தெய்வத்திற்கு தனியான வணக்கஸ்தலத்தை அமைத்தான். எல்லாளன் தனது தளபதிகளாக சிங்களவர்களை நியமித்தான். இவ்வாறு வரலாற்றுச் சம்பவங்கள் எமது மாற்றுக் கலாசாரத்தை மதிக்கும் பண்பை வளர்க்கின்றன.

தரம் - 11

i. இலங்கையின் நிருவாகத்திற்கு பொறுப்பாக செயற்பட்ட முதல் 3 ஆங்கில ஆளுநர்களைத் தருக.

ii. 1803 கண்டி படையெடுப்பு தோல்வி அடைந்தமைக்கான 4 காரணங்களைத் தருக.

iii. 1815 இல் கண்டி இராச்சியம் தனது சுதந்திரத்தை இழந்தமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக.

vi. கோல்புறுக் யாப்பினால் இலங்கையில் ஏற்பட்ட நீண்ட கால விளைவுகள் மூன்றை விளக்குக.

விடைகள்

i.

1. பிரடரிக் நோத்
2. தோமஸ் மெயிற்லண்ட்
3. றொபட் பிறவுண்றிக்

ii.

1. கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையே வீதி ஒன்றை அமைப்பதற்கு கண்டி மன்னனின் அனுமதியை ஆங்கிலேயர் கேட்டனர். அதற்கு மன்னன் மறுப்புத் தெரிவித்தமை.
2. படை வீரர்கள் சென்றபோது, கண்டியில் பருவ மழை ஆரம்பித்தமை.
3. கண்டியில் நிலவிய குளிர் ஆங்கிலேயருக்கு பாதகமாக இருந்தமை.
4. ஆளுநர் நோத் நன்கு திட்டமிடாது படையெடுத்தமை.

iii.

1. மன்னனின் கொடூர நடவடிக்கை

இறுதி கண்டி மன்னனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் கொடூர நடவடிக்கைகள் அவனது வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தன. மன்னன் பிலிமத்தலாவ என்ற பிரதானிக்கு 1811 இல் மரணதண்டனை வழங்கினான். எகலப்பொல பிரதானியின் மனைவியையும், பிள்ளைகளையும் கொடூரமாகக் கொலை செய்தான். மக்களை காரணமின்றி தண்டித்தான். தன்னை எதிர்த்தவர்களை சிறையில் அடைத்து சித்திரவதை செய்தான். இவ்வாறு கண்டி மன்னன் சர்வாதிகார ஆட்சி நடத்தியமையால் பொதுமக்களும், பிரதானிகளும் பிக்குமாறும் மன்னனை எதிர்த்தார்கள். இதனால் கண்டி ஆங்கிலேயரிடம் வீழ்ந்தது.

2. ஆளுநரின் திட்டமிட்ட செயற்பாடு

ஆளுநர் பிறவுண்றிக் நன்கு திட்டமிட்டே கண்டி மீது படையெடுத்தார். கண்டியின் தரைத்தோற்றம், காலநிலை, படைப்பலம் என்பவற்றின் தகவல்களை நன்கு சேகரித்தார். படைசெல்லும் பாதையையும், படைவீரர்களுக்குத் தேவையான பொருட்களையும் சிறப்பாக திட்டமிட்டார். 1815 இல் நீண்ட காலமாக பாதுகாக்கப்பட்டு வந்த கண்டியின் சுதந்திரம் பறிபோனதற்கு பிறவுண்றிக் ஆளுநரின் திட்டமிடலே காரணமாகும். மேலும் கண்டி மன்னனை தந்திரமான முறையில் மதுவுக்கு அடிமைப்படுத்தி, கண்டி வீழ்ச்சிக்கு ஆளுநர் வழிவகுத்தார்.

iv.

1. பெருந்தோட்டத்துறை வளர்ச்சியடைந்தது

கோல்புறுக் குழுவினர் வருவதற்கு முன்பு, அரசாங்கமே கறுவாவை ஏற்றுமதி செய்வதற்கும், உற்பத்தி செய்வதற்கும் உரிமை பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் இந்த ஏகபோக உரிமையை கோல்புறூக் குழு இல்லாமல் ஆக்கியது. தனியாரும் கறுவாவை உற்பத்தி செய்வதற்கும் உரிமை பெற்றிருந்த அரசின் இந்த ஏகபோக உரிமையை கோல்புறூக் குழு இல்லாமல் ஆக்கியது. தனியாரும் கறுவாவை உற்பத்தி செய்யவும் ஏற்றுமதி செய்யவும் கோல்புறூக் குழு வழிவகுத்தது. இதனால் பலர் கறுவாவையும், பின்பு தேயிலையையும் உற்பத்தி செய்ய முன்வந்தனர். ஜோர்ஜ்பர்ட் என்பவர் 1822 இல் கம்பளை-சிங்ஹபிட்டி என்னுமிடத்தில் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்தார். 1824 இல் எட்வர்ட் பாண்ஸ் என்பவர் கண்ணொறுவாவில் தனியார் கோப்பித் தோட்டத்தை நிறுவினார்.

2. நீதிமன்றங்கள் உருவாகியமை

கோல்புறூக் சிபாரிசுகள் 1833 இல் நடைமுறைக்கு வந்தன. கோல்புறூக் யாப்பு நீண்டகாலமாக இலங்கையில் நிலவிய கம்சபா முறையை இல்லாமலாக்கியது. அதற்கு பதிலாக பிரித்தானியாவை நடைமுறையில் இருப்பது போல, நீதிமன்றங்கள் நகரங்களில் நிறுவப்பட்டன. முன்பு கிராம மக்கள் தமது பிரச்சினைகளை கம்சபா மூலம் இலகுவாகத் தீர்த்து கொண்டனர். ஆனால் அம்முறை ஒழிக்கப்பட்ட பின்பு கிராம மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்கினர். நீதிமன்றங்களுக்காக அவர்கள் அடிக்கடி நகரங்களுக்கு செல்ல வேண்டியிருந்தது. மேலும் அவர்கள் வழக்கு தொடர்பாக, சட்டத்தரணிக்காக செலவு, முத்திரைச் செலவு போன்ற செலவுகளுக்காக அதிகமான பணத்தை செலவிட வேண்டியிருந்தது.

3. சுய மொழிகள் பாதிக்கப்பட்டமை

கோல்புறூக் குழுவினர் ஆங்கில மொழியை பாடசாலைகளில் போதனா மொழியாக ஆக்கினர். ஆங்கில மொழியை போதனா மொழியாகக் கொண்டிருக்காத கிராமத்தில் இயங்கிய சிங்கள, தமிழ் பாடசாலைகள் மூடப்பட்டன. இதனால் சிங்கள மொழியும் தமிழ் மொழியும் பாதிக்கப்பட்டன. கிராம மக்கள் வாழ்ந்த ஏழைப் பிள்ளைகளுக்கு கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டது. பணக்காரப் பிள்ளைகள் ஆங்கிலம் கற்று முன்னேற, கிராமத்தில் வாழ்ந்த ஏழைப் பிள்ளைகள், கல்வி மறுக்கப்பட்டதால் பின்னடைவை எய்தினர்.

இளைஞர்களே...

உங்கள் திறமை மீது ஒருபோதும் சந்தேகம் வேண்டாம்!

டாக்டர் அப்துல் கலாம்

ஜெய்ப்பூரில் நடந்த இலக்கிய விழாவில் கலந்து கொண்ட அப்துல் கலாம் தனது அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார். அவ் அனுபவப் பகிர்வில் அவர் தெரிவித்ததாவது:

நான் பைலட்டாக வேண்டும் என ஆசைப்பட்டேன். அதனால்தான் ஏரோனாட்டிக்கல் என்ஜினியரிங் படிப்பை தேர்வு செய்து படித்தேன். பைலட்டாக வருவதற்கு செலக்சன் பேனலுக்கு போன போது அங்கே 10 பேர் இருந்தார்கள். இருப்பது 9 சீட் மட்டுமே. கடைசியில் என்னை தான் கழற்றி விட்டார்கள்.

எனக்கு அப்போது மனமே உடைந்து விட்டது போலிருந்தது. ஆனால், என்னால் பைலட்டாக வர முடியாமல் போனாலும், இந்த நாட்டுக்கே ஜனாதிபதியாக பின்னாளில் வந்துவிட்டேன்.

நான் ஜனாதிபதியானதும் விமானப்படை தளபதியிடம் எனக்கு விமானத்தில் பறக்க கற்றுத் தருமாறு கேட்டுகொண்டேன். 6 மாதம் பயிற்சி எடுத்துக் கொண்டேன். இருந்தாலும் என்னால் பைலட்டாக முடியவில்லை என்றாலும் இன்று வரை என்னுடைய பறக்கும் கனவை நனவாக்கிக் கொண்டுதான் இருக்கிறேன். இது எப்படி நடந்தது? நான் கனவு கண்டதால் நடந்தது. நான் பறக்க வேண்டும் என கனவு கண்டேன். அதனால் நடந்தது. என்னுடைய கனவுகள் எண்ணங்களானது. என் எண்ணங்கள் செயலாக மாறின.

உங்கள் கனவுகள் நனவாக உங்களுக்கு நான் ஒரு மந்திரத்தை சொல்லிக் கொடுக்கிறேன். ''உங்கள் திறமையின் மீது ஒருபோதும் சந்தேகப்படாதீர்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்தாலும் நான் கொடுத்த இந்த மந்திரத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எனக் என்ன கிடைக்கும் என்று எப்போதும் நினைக்காதீர்கள். அங்குதான் பிரச்சினைகள் தொடங்கிவிடுகின்றன.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஹாப் ஏ. ஹனீபா (இஸ்லாஹி)

கற்றலில் ஏற்படும் இடையூறுகள்

அன்புக்குரிய மாணவர்களே! எமது பள்ளிப் பருவத்தைக் கடக்கும் வரை இவ்வாறு ஆயிரம் காரணங்களை நாம் முன்வைக்கலாம். எனினும் படிப்பதிலிருந்து ஒதுங்கியிருக்க நாம் முன்வைக்கும் இத்தகைய காரணிகள் ஒருபோதும் எமது வாழ்க்கையில் முன்னேற்றத்தையோ விமோசனத்தையோ தரப்போவதில்லை என்பதே பேருண்மை.

அறிவியலுக்கான நூற்றாண்டு என்று வர்ணிக்கப்படும் இந்த யுகத்தில் மாணவர்கள் முன்பை விட பல சவால்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக கற்றலுக்கு தடங்கல்களையும் இடையூறுகளையும் ஏற்படுத்தும் பல காரணிகளை தமக்குள்ளிருந்தும் தமக்கு வெளியிலிருந்தும் முகம் கொடுக்கின்றனர். கால வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் மாற்றமடையும் கலைத்திட்டம் ஒரு புறமிருக்க, மாணவர்களின் சிந்தனை, செயற்பாடுகளைத் திசை திருப்பும் கவர்ச்சிகரமான நிகழ்சி நிரல்கள் மறுபுறமிருக்க, இன்று எல்லாமே கல்வியினால்தான் சாத்தியமாகும் என்று உணரப்படும் சந்தர்ப்பத்தில் இத்தகைய கற்றலுக்கான தடைகள் பெரும் சுமையாகவே மாணவர்களாலும் மற்றவர்களாலும் பார்க்கப்படுகின்றன. கற்றலில் மாணவர்கள் எதிர்நோக்கும் தடைகளையும் இடையூறுகளையும் தெளிவாக வெளிப்படுத்தி அத்தகைய தடங்கல்களுக்கு மத்தியிலும் காலத்தின் கட்டாயத் தேவையாக மாறியுள்ள கல்வியைத் திறம்பட மேற்கொள்ளும் வழிமுறைகளைக் கலந்துரையாடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கற்றலுக்குத் தடையாக, இடையூறாகச் சொல்லப்படும் காரணிகள்

மாணவர்கள் மத்தியில் நீங்கள் நன்றாகப் படித்து நல்ல பெறுபேறுகளைப் பெறுவதற்குத் தடையாக நினைக்கின்ற காரணிகள் என்ன? என வினவியபோது அவர்களின்பதில் உண்மையில் ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன. கற்றலுக்குத் தடை அல்லது இடையூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மாணவர்கள் கருதும் அத்தகைய காரணிகள் வருமாறு :

- படிக்க நினைத்தாலே தூக்கம் வருகிறது.
- புத்தகத்தைத் திறந்தால் நண்பர்களுடன் கதைத்த, அரட்டையடித்த விடயங்கள் ஞாபகத்துக்கு வரு கின்றன. அந்த ஞாபகங்கள் வரும்போது 5 நிமி டங்களில் ஓய்வு தேவைப்படுகின்றன. இதனால் படிக்க முடிவதில்லை.
- 5 அல்லது 10 நிமிடங்கள் படித்தால் தண்ணீர் குடிக்கத்தோன்றும், தண்ணீர் குடிக்க வெளியே வந்தால் பிள்ளைகள் விளையாடுவார்கள், அவர் களைப் பார்த்ததும் அவர்களுடன் சேர்ந்து விளை யாடத் தோன்றும். இப்படி உள்ளம் திசை திருப் பப்பட்டால் படிக்கப் பிடிக்காது.
- புதிதாக என்ன படம் வெளியாகி உள்ளது என்ற யோசனை படிக்க விடாது.
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண் டும் என்ற ஆசைக்கு தாய் சம்மதிக்கமாட்டாள் என்பதால் படிப்பில் வெறுப்பு ஏற்படுகிறது.
- முகப்புத்தகத்தில் (Facebook) கேம் விளையாடு வதற்குள்ள ஆசை படிக்க விடுவதில்லை. முகப் புத்தகத்தில் நண்பர்களுடன் அரட்டை அடித் தல், comment பண்ணுதல் இன்னும் பல.
- புத்தகத்தைத் திறந்தால் கற்பனை கற்பனையாக மனதில் தோன்றி அதில் வாழ்தல். உதாரணமாக புத்தகத்தைத் திறந்தால், விளையாட்டுப் போட்டி எப்போது? பாடசாலைச் சுற்றுலா எப்போது? நண்பர்களுடன் சுற்றுலா போவது எப்போது? என்ற யோசனை அல்லது பாடசாலையில் நடந்த ஒன்றைக் கற்பனையில் திரும்பத் திரும்பக் கொண்டு வருவதால் படிக்க விருப்பமின்மை.
- கிரிக்கட் விளையாட்டின் மீதுள்ள ஆசை படிப் பில் இல்லாமை.
- கற்பவை மறக்கின்றன. எனவே படித்து என்ன பிரயோசனம் என்ற எண்ணம்.
- எதிர்பால் கவர்ச்சியினால் ஏற்படும் கற்பனை களில் வாழுதல்.
- கைத்தொலைபேசியில் கேம் விளையாடுதல், நண் பர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்புதல், அரட்டை அடித்தல்.
- புதிதாகப் பார்த்த திரைப்படத்தின் கதையை மற்ற நண்பர்களிடம் பரிமாறல்.
- வகுப்பறையில் உள்ள ஆசிரியர் அணிந்திருக் கும் ஆடை, அணிகலன்களைப் பற்றி பேசிக் கொண்டிருத்தல்.
- ஊர் சுற்றுவதில் அதிக இன்பம்.
- Computer Game விளையாடுவதில் அதிக ஆர்வம்.

இப்படி மாணவர்களால் முன்வைக்கும் தடங் கல்களின் பட்டியல் நீண்டு செல்கின்றன.

அன்புக்குரிய நாளைய தலைவர்களே! நீங்கள் உதட்டால் செய்யும் இந்தத் தர்க்கத்தை உங்களுடைய உள்ளங்கள் நியாயப்படுத்துமெனில் உங்களுடைய விவாதம் நூறு வீதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதே. ஆனால், உண்மையில் நடப்பது என்ன என்பது உங்களுடைய உள்ளத்தில் கைவத்து ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

அன்புக்குரிய மாணவர்களே! எமது பள்ளிப் பரு வத்தைக் கடக்கும் வரை இவ்வாறு ஆயிரம் கார ணங்களை நாம் முன்வைக்கலாம். எனினும் படிப் பதிலிருந்து ஒதுங்கியிருக்க நாம் முன்வைக்கும் இத் தகைய காரணிகள் ஒருபோதும் எமது வாழ்க்கையில் முன்னேற்றத்தையோ விமோசனத்தையோ தரப்போ வதில்லை என்பதே பேருண்மை.

உங்களைப்போன்ற மாணவர்களால் சொல்லப் பட்ட இத்தகைய கற்றலுக்கான தடைகளிலிருந்து விடுபட்டு கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்று எதிர்கால வாழ்க்கையை ஒளிமயமாக்க என்ன செய்யலாம் என்பதை சற்று விரி வாகப் பார்ப்போம். இதற்காக மேலே சொல்லப் பட்ட தடங்கல்களை 5 பிரதான பகுதிகளுக்குள் உள் ளடக்கி நோக்குவோம்.

1. உங்களுடைய கைத்தொலைபேசி.
   - கேம் விளையாடுதல்.
   - நண்பர்கள் மற்றும் இனந்தெரியாதவர்களு டன் Chat பண்ணுதல்.
   - இசைகளைச் செவிமடுத்தல்.
   - புகைப்படங்களைப் பார்த்தல்.
   - வீடியோக்களைப் பார்த்தல்.
   - இன்னும் அதிலுள்ள தேவையற்ற அப்ளி கேஸன்களைப் பிரயோகித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பயன்படுத்தும் கைத்தொலைபேசி உங்களுடைய நேர்ப்பாங்கான சிந்தனையில், கல்வியில், ஒழுக்க விழுமியங்களில், நல்ல நேர்ப்பாங்கான மனப்பாங்குகளில், ஆளுமைகளில், நடத்தையில் முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்குப் பதிலாக இவைகளில் பின்னடைவைக் கொண்டுவருமெனில் அத்தகைய ஒரு கருவி உண்மையில் உங்களுக்குத் தேவைதானா?

இந்த வகையில் நோக்கும் போது உங்களுடைய கைத்தொலைபேசிதான் உங்களுடைய கற்றலுக்கான முதலாவது தடங்கற் காரணியாக அமைகிறது.

தீர்வுகள்

குறைந்தது படிக்கும்போது உங்களுடைய கைத் தொலைபேசியை நிறுத்தி வையுங்கள்.

படிக்கும்போது யாருடனும் தொலைபேசியில் கதைப்பதில்லை என ஒரு சட்டத்தை உங்களுக்கு நீங்களே வகுத்துக் கொள்ளுங்கள்.

படிப்பதற்கு என்று ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட விடயங்களைப் படித்து முடிப் பதற்கு முன்னர் யாருக்கும் குறுஞ்செய்தி அனுப்புவதோ, Chat பண்ணுவதோ இல்லை என்பதை உங் களுடைய நல்ல பழக்கங்களில் ஒன்றாகக் கருதி அதைக் கடைப்பிடித்து வாருங்கள்.

கல்வியோடு சம்பந்தமில்லாத இசை, பாடல்கள், வீடியோக்கள் மற்றும் பிரயோசனமற்ற படங்கள் உங்களுடைய கல்வி முன்னேற்றத்தில் எத்தகைய சாதகமான பாதிப்புகளையும் ஏற்படுத்தாது என்ற உண்மையை பெரியவர்களின் அறிவு முதிர்ச்சியிலிருந்து வரும் அறிவுரைகள் மற்றும் சகமாணவர்களின் நடவடிக்கைளிலிருந்து அறிந்து படிப்பினை பெறத் தவறாதீர்கள்.

விஞ்ஞான தொழிநுட்பம் வளர்ச்சியடைந்த, தொலைத் தொடர்பு சாதனங்கள் அபரிமிதமான வளர்ச்சி கண்ட, தொலைத் தொடர்பு சாதனங்கள் முன்னேற்றமடைந்த இன்றைய காலத்தில் நாளாந்த செய்திகளையும் தகவல்களையும் இற்றைப்படுத்தி (Update) நிகழ்கால சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஒரு நிஜமான மாணவனாக மிளிர கைத் தொலைபேசி அத்தியவசியமாகும் என்பது கைத்தொலைபேசிக்கு அடிமையான நிறைய மாணவர்களின் விவாதமாக இருக்கிறது.

அன்புக்குரிய நாளைய தலைவர்களே! நீங்கள் உதட்டால் செய்யும் இந்தத் தர்க்கத்தை உங்களுடைய உள்ளங்கள் நியாயப்படுத்துமெனில் உங்களுடைய விவாதம் நூறு வீதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதே. ஆனால், உண்மையில் நடப்பது என்ன என்பது உங் களுடைய உள்ளத்தில் கைவத்து ஒரு கணம் சிந்தித் துப் பாருங்கள்.

நீங்கள் பயன்படுத்தும் கைத்தொலைபேசி உங்களுடைய நேர்ப்பாங்கான சிந்தனையில், கல்வியில், ஒழுக்க விழுமியங்களில், நல்ல நேர்ப்பாங்கான மனப்பாங்குகளில், ஆளுமைகளில், நடத்தையில் முன்னேற்றத்தைக் கொண்டுவருவதற்குப் பதிலாக இவைகளில் பின்னடைவைக் கொண்டுவருமெனில் அத்தகைய ஒரு கருவி உண்மையில் உங்களுக்குத் தேவைதானா?

உங்களுடைய உள்ளங்களை நீங்கள் மாற்றாத வரை அல்லாஹ்வோ, வேறு எவருமோ மாற்ற முடியாது என்பது படைத்த அல்லாஹ்வின் வாக்கு. எனவே, நீங்கள் வைத்திருக்கும் கருவியே உங்களின் அழிவுக்கு வழிவகுக்கும் கருவி என்பதை நன்கு அறிந்த பின்பும் விவாதங்களையும் நியாயங்களையும் முன்வைத்து தமது கையினாலேயே தம்மை அழித்துக் கொள்ள இதன் பிறகும் முற்படுவீர்களாயின் காலம்தான் உங்களுக்கு பதில் சொல்லும்.

கைத்தொலைபேசியை முற்றாக மறந்து விடுங்கள் என்று நான் கூறவில்லை. அதைக் கவனமாகக் கையாள மேலே சொன்ன ஆலோசனைகளுடன் இன்னும் என்ன செய்யலாம் என்ற திட்டமிட்ட வரையறைகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67வது சுதந்திர தினம்

கதுருவெல எம்.வினாசர் (இஸ்லாஹி)

மனிதன் பிறக்கும் போது சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவன் பல்வேறு தடைகளால் கட்டப்பட்டு அச் சுதந்திரத்தை இழக்கின்றான் என்பதே உண்மையாகும். சுதந்திரம் என்பது ஒரு மனிதன் வரையறைகளுக்கு உட்பட்டு ஏனையவர்களின் சுதந்திரத்திற்குப் பங்கம் ஏற்படாத வகையில் தான் விரும்பியதைச் செய்வதற்கு உள்ள உரிமைகளே எனலாம்.

இலங்கை தாயகமானது வரலாற்றில் பல பெருமைகளைக் கொண்ட பூமியாகும். அத்தோடு பல்வேறுபட்ட விவசாய, தாவர பூமியாகவும் காணப்பட்டதால் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் காணப்பட்டது.

இவ்வாறு சுமார் 443 ஆண்டுகள் வெளிநாட்டவர்களின் கட்டுப்பாட்டினுள் இருந்த இலங்கையை மீட்டெடுப்பதில் இலங்கையர் அனைவரும் இன, மத பேதமின்றி போராடி 1948.02.04 ஆம் திகதி இலங்கையை காலனித்துவ ஆட்சியில் இருந்து மீட்டெடுத்தனர்.

இத்தினத்தையே இலங்கையின் தேசிய தினமாக கொண்டாடுகிறோம். 2015 ஆம் ஆண்டு இலங்கையின் 67 வது சுதந்திர தினம் நாடு பூராகவும் கொண்டாடப்படுகின்றது.

இலங்கையின் சுதந்திரத்திற்காக இனமத பேதமின்றி போராடியவர்கள்

1. ரீ.பி. ஜாயா

2. சேர் ராசிக் பரீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சேர் பொன்னம்பலம் ராமநாதன்

4. டீ.எஸ். சேனாநாயக்கா

5. எஸ்.டபல்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க

6. சேர் ஜோன் கொத்தலாவ

சுதந்திர இலங்கையின் பிரதமர்கள்

1.	டீ.எஸ். சேனாநாயக்க	*(1947-1952)*
2.	டட்லி சேனாநாயக்க	*(1952-1953)*
3.	ஜோன் கொத்தலாவ	*(1953-1956)*
4.	எஸ்.டபல்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க	*(1956-1959)*
5.	ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க	*(1960-1965)*
6.	டட்லி சேனாநாயக்க	*(1965-1970)*
7.	ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க	*(1970-1977)*
8.	ஜே.ஆர். ஜெயவர்தன	*(1977-1978)*
9.	ரணசிங்க பிரேமதாஸ	*(1978-1979)*
10.	டீ.பி. விஜயதுங்க	*(1989-1993)*
11.	ரணில் விக்ரமசிங்க	*(1993-1994)*
12.	ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க	*(1994-1999)*
13.	சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க	*(1999-2001)*
14.	ரணில் விக்ரமசிங்க	*(2001-2004)*
15.	மஹிந்த ராஜபக்ஷ	*(2004-2005)*
16.	ரட்னசிரி விக்ரமநாயக்க	*(2005-2010)*
17.	டி.எம். ஜயரத்ன	*(2010-2014)*
18.	ரணில் விக்ரமசிங்க	*(2015-இதுவரை)*

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசின் ஜனாதிபதிகள்

1978 ஆம் ஆண்டு யாப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அமுலுக்கு வந்தது. இதன் பிரகாரம் இலங்கை ஜனாதிபதியாக பதவி வகித்தவர்கள்.

1. ஜே.ஆர். ஜெயவர்தன *(1978-1979)*

2. ஆர். பிரேமதாஸ *(1989-1993)*

3. டி.பி. விஜயதுங்க *(1993-1994)*



4. சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க *(1994-2005)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. மஹிந்த ராஜபக்ஷ
(2005-2014)

6. மைத்திரிபால சிறிசேன
(2015-இதுவரை)

மைத்திரிபால சிறிசேன

இலங்கையில் 6வது ஜனாதிபதியாவார்.

முழுப்பெயர்

பள்ளேவத்த கமரால லாகே
மைத்திரிபால சிறிசேன

பிறப்பு 1951 செப்டம்பர் 3 ஆம் திகதி

1955 ரக்ஷ உயன பாடசாலையில் ஆரம்ப கல்வி

1967 ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இளைஞர் அமைப்பின் அங்கத்தவர்.

1973 குண்டசாலை விவசாயக் கல்லூரியில் 'கமத் தொழில் டிப்ளோமா' பட்டம் பெற்றார்.

1974 முதல் தொழிலாக பொலன்னறுவை கூட்டுறவு கொள்வனவு உத்தியோகத்தர்.

1976 கிராமஉத்தியோகத்தராககடமையேற்றார்.

1989 முதற்தடவையாக பொலன்னறுவை மாவட்டத்தில் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு 1989.02.15 ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

1994 பொதுத்தேர்தலில் பொலன்னறுவையில் ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றார். அதனை தொடர்ந்து நீர்ப்பாசன பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2000 ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உப தவிசாளராக தெரிவானார்.

2001 கட்சியின் 12 வது பாராளுமன்றத்திற்கு தெரிவானதுடன் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

2010 பாராளுமன்றத்துக்கு தெரிவாகி UPFA அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2014 உலக சுகாதார ஸ்தாபனத்தின் நான்கு உப தலைவர்களுள் ஒருவராக தெரிவானார்.

2014 நவம்பர் - 2015 ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்டு இலங்கையின் 6 வது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக தெரிவானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: எம்.ஐ. அப்துல் ரஹீம், மாவனல்லை

ஒருங்கிசைவு

01. பின்வரும் முக்கோணிச் சோடிகள் ஒருங்கிசைவதாயின் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

i.



ii.



iii.



iv.



v.



vi.



02.



ΔPQR இல் $QT = TR$, $PT \perp QR$ ஆகும்.

i. நிறுவ வேண்டியது : $\Delta PQT = \Delta PRT$

நிறுவல் : ΔPQT , ΔPRT இல்

$QT = TR$ (தரவு)

...... = ...

...... = ...

...... = ...

∴ $\Delta PQT = \Delta PRT$

ii. நிறுவ வேண்டியது ΔPQR ஓர் இரு சமபக்க முக்கோணி

நிறுவல்: ....

....

03. உருவில் $BE = EC$, $B\hat{A}C = B\hat{D}C$ எனின்

i. $\Delta ABC = \Delta CDE$ என நிறுவுக.



காரணிகள்

01. பின்வரும் மூவுறுப்புகளை நான்கு உறுப்பாக மாற்றி காரணி காண்க.

i. $a^2 + 7a + 10$ ii. $k^2 - 10k - 16$

iii. $4m^2 - 3mn - 10n^2$ iv. $54 - 15t - t^2$

02. தரப்பட்டுள்ள மூவுறுப்பிகளின் ஒரு காரணி அடைப்புக்குள் தரப்பட்டுள்ளது. மற்றைய காரணியை வகுத்தல் முறை மூலம் காண்க.

i. $x^2 + 15x \div 14, (x+1)$

ii. $y^2 - 13y - 48, (x-3)$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கோணிகள்

01. அட்சரங்களில் குறிக்கப்பட்டுள்ள கோணங்களை காண்க.



$x =$ ....

$y =$ ....



$a =$ ....

$b =$ ....



$p =$ ....

$q =$ ....

02. உருவில் $AB = AC$, $A\hat{C}B = 72^0$, $ADB = 54^0$ எனின் பின்வருவனவற்றைக் காண்க.



i. EBC இன் பெறுமானம்

ii. $B\hat{A}C$ இன் பெறுமானம்

iii. $\Delta A\hat{B}D$ எவ்வகையான முக்கோணி

03. தரப்பட்டுள்ள மூடியுள்ள தகரப்பேணியின்

i. வளைமேற்பரப்பு யாது?

ii. மொத்த மேற்பரப்பளவைக் காண்க.



03. 30 cm ஆரையும் 50 cm உயரமும் உடைய நிறச்சாயம் நிரப்பும் உருளை வடிவப் பாத்திரம் ஒன்றின் வளைமேற்பரப்பின் மீது சுட்டுத் துண்டு ஒட்டப்பட வேண்டுமாயின் விளம்பரம் ஒட்ட வேண்டிய கடதாசியின் குறைந்த பரப்பளவு யாது? $(\pi = 3.14)$

04. 12a உயரமும் 8a விட்டமுடைய செவ்வுருளை வடிவ மரக்குற்றி ஒன்று இரு சம பகுதிகளாக பிரிக்கப்பட்டு ஒரு துண்டு உருவில் தரப்பட்டுள்ளது.



i. இதன் வளை மேற்பரப்பளவு $48\pi r^2$ எனக் காட்டுக.

ii. உருவின் மொத்த மேற்பரப்பளவினை π, a சார்பில் தருக.

05. a பக்க நீளமுள்ள சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளத்தின் 3 மடங்கிலிருந்து 2 அலகுகள் குறைத்தும் மற்ற பக்கத்துடன் 5 அலகுகள் கூட்டியும் செவ்வகம் ஒன்று உருவாக்கப்படுகின்றது.

i. செவ்வகத்தின் நீள அகலங்களை எழுதுக.

ii. செவ்வகத்தின் பரப்பளவை a இல் தருக.

பரப்பளவு

அரைவட்டம்  $A = \frac{1}{2}\pi r^2$

1/4 வட்டம்  $= \frac{1}{4}\pi r^2$

உருளை $A = 2\pi rh + \pi r^2$ 

01. பின்வரும் உருக்களின் பரப்பளவைக் காண்க.

i



A = ...

....

ii.



A = ...

....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AHARAM அகரம்

iii.



A = ...
....
....
....

iv.



A = ...
....
....
....

v.



A = ...
....

iv.



....
....

உருவின் பரப்பளவு $2a^2(\pi + 16)$ எனக் காட்டுக.

02. ABCD என்பது செவ்வக வடிவக் காணியாகும். காணியின் உரிமையாளர் அரைவட்டப் பகுதியில் வெண்டியும் நிழற்றப்பட்ட பகுதியில் கத்தரியும் முக்கோணப் பகுதியில் மிளகாயும் பயிரிட்டார்.

i. அரைவட்டப் பகுதியின் பரப்பளவு யாது?



மகிழ்ச்சியாக வாழுங்கள்

அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஒரு கூற்று இவ்வாறு இருக்கிறது: ''உள்ளத்தை சுதந்திரமாக இருக்கச் செய்யுங்கள். மகிழ்ச்சியூட்டும் நுட்பமான கருத்துக்களை சிந்தித்த வண்ணம் இருங்கள். ஏனெனில், உடலைப் போன்றே உள்ளமும் சோர்ந்து விடுகிறது!''

இறுகிய மனமும் மகிழ்ச்சியற்ற பாங்கும் கொண்டு இருக்காதீர்கள். மகிழ்ச்சியுடனும் பொலிவுடனும் சந்தோஷமாகவும் திகழுங்கள். ஆனால், வரம்புகளை மீறாமல் இப்பணிகள் அனைத்தையும் செய்யுங்கள். உங்களுடைய மகிழ்ச்சியூட்டலும், கேலிப்பேச்சுக்களும் வரம்பு கடந்து சென்று விடக் கூடாது. இதில் கண்ணும் கருத்துமாக இருங்கள். வரம்புக்குட்பட்டு இனிய முறையில் வாழுங்கள்; விளையாட்டு, கேளிக்கை போன்ற ஈடுபாடுகளுடன், இறைமார்க்கத்தின் கௌரவம், கண்ணியம், சமநிலையான நடத்தை ஆகியவற்றையும் பேணி வாழுங்கள்.

அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அருளினார்கள்:

''நபித்தோழர்கள் கேளிக்கை இல்லாமல் உயிரற்றவர்கள் போன்ற நடத்தையை மேற்கொள்வதில்லை. மாறாக, தம்முடைய அவைகளில், கவிதைகளும் பாடினார்கள். அஞ்ஞானக் காலத்தின் வரலாற்றையும் கதைகளையும் கூறிக் கொண்டிருந்தார்கள். ஆனால், சத்தியத்துக்கு எதிராக ஏதேனும் கோரிக்கை வந்தாலோ, அவர்களிடத்தில் கோபம் பொங்கியெழும்! அவர்கள் அதனை எதிர்த்து முழுமையாக ஈடுபடுவார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது ஆசிய கரையோர விளையாட்டு விழா

4th ASIAN BEACH GAMES PHUKET THAILAND 2014

- நான்காவது ஆசிய கரையோர விளையாட்டு விழா 2014 நவம்பரில் தாய்லாந்து நாட்டின் டிங்க் கெட் கரையோரத்தில் நடைபெற்றது.
- இவ் விளையாட்டு போட்டியில் 38 நாடுகள் பங்குபற்றின.
- இவ் விளையாட்டு போட்டியில் பதக்கம் வென்ற நாடுகளில் இலங்கை 35 வது இடத்தை பெற்றுக் கொண்டதுடன் கபடி விளையாட்டு போட்டியில் பங்குபற்றிய ஆண் பெண் அணியினர் இரண்டு வெண்கல பதக்கங்களை வென்றெடுத்தனர்.
- பதக்க பட்டியலில் முதலாமிடத்தை தாய்லாந்து, இரண்டாம் இடத்தை சீனா, மூன்றாமிடத்தை தென்கொரியா பெற்றமை குறிப்பிடத்தக்கது.
- இலங்கை கபடி அணியின் தலைவர், சப்ரகமுவ மாகாண முதலமைச்சரான மஹிபால ஹேரத் ஆவார்.

1919 க்கு வினவல்கள்

- அரச தகவல் மையம் (1919) க்கு 2013 ஆம் ஆண்டில் கிடைக்கபெற்ற அழைப்புகள் 16 இலட்சத்தை தாண்டியுள்ளதென இலங்கை தகவல் தொழில் நுட்ப முகவர் நிலையம் (ICTA) குறிப்பிடுகின்றது.
- இவற்றுள் ஏறத்தாழ அரைப்பங்கு அதாவது 749, 016 அழைப்புகள் மேல் மாகாணத்தில் இருந்து கிடைக்கப் பெற்றமை ஆகும்.



திரு. பீ. உமா சங்கர்,
B.Com (Jaf), M.Com (Kelaniya) (PDE) Spl.Trd.com, NDBF, Sri Lanka Technical College - Colombo

சிகரெட் பெட்டிகளில் 60 வீத எச்சரிக்கை

- சிகரெட் பெட்டிகளில் 60 வீத எச்சரிக்கை புகைப்படங்கள் இன்றி சந்தைக்கு விடப்படின் அவை 2015 ஜனவரியில் இருந்து தடைசெய்யப்படும்.
- 164/14, 166/14 ஆகிய இலக்கங்களை உடைய உயர் நீதிமன்ற வழக்கின் தீர்ப்புகளுக்கு அமைய நிறைவேற்றப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புகையிலை தொடர்பான சட்டமூலத்தின் படி சிகரெட் பெட்டிகளில் 60 வீதமான எச்சரிக்கை புகைப்படங்கள் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



7 வது ஜனாதிபதி தேர்தல்

- நடைபெற்ற தினம் - 2015.01.08
- தேர்தல் நடைபெறுவதற்கு ஏதுவான சட்டம் - 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டம்.
- பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் - 15,044,090 (2014 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் படி)
- போட்டியிட்ட வேட்பாளர்கள் - 19 (இதுவே கூடுதலான எண்ணிக்கை)
- வாக்களிப்பு நிலையங்கள் - 12,314
- வாக்கெண்ணும் நிலையங்கள் - 1,419
- கூடியளவு வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்ட மாவட்டம் - கம்பஹா (16,37,537)
- குறைந்தளவு வாக்காளர் பதிவு செய்யப்பட்ட மாவட்டம் - வன்னி (254,058)
- தேர்தல் மாவட்டம் - 22
- தேர்தல் தொகுதிகள் - 160
- ஜனாதிபதியாவதற்கான தகைமை - நாடு முழுவதும் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் அடிப்படையில் 50 சதவீதத்தை விட ஒரு வாக்கினை அதிகமாக பெறும் வேட்பாளர்.

தேர்தல் முடிவுகள்

- அளிக்கப்பட்ட வாக்குகள் - 12,264,377 - 81.52%
- செல்லுபடியான வாக்குகள் - 12,123,452 - 98.85%
- நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - 140,925 - 1.15%
- 7வது புதிய ஜனாதிபதி - மைத்திரிபால சிறிசேன - 6,217,162 - 51.28%
- 2 ஆம் நிலை - மஹிந்த ராஜபக்ஷ - 5,768,090 - 47.58%

சார்ளி ஹெப்டோ சஞ்சிகை

- 2015 ஜனவரியில் பிரான்ஸில் உள்ள சார்ளி ஹெப்டோ சஞ்சிகை அலுவலகம் மீது படுகொலை தாக்குதல் நடைபெற்றுள்ளது.
- இதில் 8 ஊடகவியலாளர்கள் உட்பட சஞ்சிகை ஆசிரியர் ஸ்டீபன் கார் போணியரும் உயிரிழந்ததுடன் இதனை அல் கொய்தா போராளி குழுவினர் நடத்தியுள்ளதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பிரான்ஸில் வாரம் ஒருமுறை வெளியாகும் சம கால நிகழ்வுகளை நையாண்டியாக சொல்லும் கேலிச் சித்திரங்கள் கொண்ட ஒரு பத்திரிகை இதுவாகும்.

- இத் தாக்குதலுக்கு அடிப்படையாக ஐ.எஸ் குழுவின் தலைவர் அபூபக்கர் அல் பக்தாதி தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட கேலிச் சித்திரமே காரணமாக அமைந்தது.
- நான் உனது கருத்தை ஏற்கப் போவதில்லை. ஆனால், அந்தக் கருத்தை சொல்வதற்கு உனக்கு இருக்கும் உரிமையை பாதுகாக்க எனது உயிரையும் கொடுப்பேன் எனக் கூறியவர் அயர்லாந்து எழுத்தாளரும் கவிஞருமான ஒஸ்கார் வைல்ட் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தந்தை முதலாம் பிரான்ஸிஸின் இலங்கை விஜயம்



- இயற்பெயர் - ஜோர்ஜ் மிரியோ பெர்கோக்வியோ
- பிறப்பு - 1936.12.17
- பிறந்த இடம் - புவேனோஸ் ஐரேஸ், ஆர்ஜென்டீனா
- குருத்துவ திருநிலைப்பாடு - 1969.12.13
- ஆயராக திருநிலை - 1992.06.27
- கர்தினாலாக திருநிலை - 2001.02.21
- திருத்தந்தை நிலை - 2013.03.13
- திருத்தந்தையின் பெயர் - முதலாம் பிரான்ஸிஸ்
- விஜயம் செய்த நாடுகள் - பிரேசில், தென்கொரியா
- இலங்கைக்கு ஏற்கனவே விஜயம் செய்தோர் - திருத்தந்தை 6 ஆம் சின்னப்பர் - 1970.12.04
  - திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் - 1995.01.20

குரோஷியாவின் முதலாவது பெண் ஜனாதிபதி

- 2015 ஜனவரியில் குரோஷியாவின் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க் கட்சியை சேர்ந்த கொலின்டா கிரபர் கிராரோவிக் வெற்றி பெற்றுள்ளார்.
- 50.5 சதவீத வாக்குகளை பெற்றுள்ள இவரது வெற்றி வலது சாரி கட்சிக்கு ஆட்சி மாறுவதற்கான அடையாளமாக உள்ளது.
- முன்னாள் யூகோஸ்லாவியாவிலிருந்து 1991 ஆம் ஆண்டு குரோஷியா விடுதலை பெறுவதற்கு இவர் பங்களிப்பு செய்ததுடன் கடந்த காலங்களில் வெளிநாட்டு அமைச்சராகவும், நேட்டோ செயலாளர் நாயகத்தின் உதவியாளராகவும் கடமையாற்றி உள்ளார்.
- குரோஷியா 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தமை குறிப்பிடத்தக்கது.



ரொஜர் பெடரர்

- 2015 ஜனவரியில் உலகின் முன்னணி டெனிஸ் வீரரும், சுவிற்சர்லாந்தை சேர்ந்தவருமான ரொஜர் பெடரர் 1000 வது வெற்றியை மூன்றாவது நபராக பதிவு செய்து கொண்டார்.
- உலக ஒற்றையர் தர வரிசையில் 2 வது இடத்திலுள்ள இவர் அவுஸ்திரேலியாவின் கபிரிஸ் பேன் சர்வதேச டெனிஸ் இறுதிப் போட்டியில் உலகின் 8 ஆம் நிலை வீரரான கனடாவின் மிலோஸ் ரயோனிக்கை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.
- இதற்கு முன்னதாக அமெரிக்காவின் ஜம்மி கானர்ஸ் (1253), இவான் லெண்டிங் (1071) ஆகியோர் 1000 வது வெற்றியை பதிவு செய்துள்ளனர்.
- இவரது வெற்றி சதவீதம் 0.815 ஆக காணப்படுவதுடன், 1998 ஆம் ஆண்டு பிரான்ஸின் குவாவ்மி ராவ்க்ஸுக்கு எதிராக தனது வெற்றிக் கணக்கை ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

தரம் - 10 | சடப்பொருளின் கட்டமைப்பு

❖ சடப்பொருட்களை இரசாயன ரீதியில் தூய பதார்த்தம், தூயதற்ற பதார்த்தம் (கலவைகள்) என இரு வகைப்படுத்தலாம்.

❖ தூய பதார்த்தங்கள் மூலகம், சேர்வை என இரு வகைப்படும்.

❖ மூலகம் என்பது இரசாயன ரீதியாக மேலும் எளிய பதார்த்தங்களாகப் பிரிக்க முடியாத ஏக வினமான அணுக்களாலான பதார்த்தம் ஆகும்.

❖ சேர்வை என்பது இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட மூலகங்கள் இரசாயன ரீதியில் திட்டமான விகிதத்தில் இணைந்து உருவாக்கும் பதார்த்தம் ஆகும்.

01. அணு என்பது மூலகங்களின் அடிப்படை அலகு ஆகும். இது புரோத்தன், இலத்திரன், நியூத்திரன் எனும் உப அணுத் துணிக்கைகளால் ஆனது.

i. பின்வரும் இயல்பைக் கொண்ட உப அணுத் துணிக்கையை எழுதுக.
   a) நேரேற்றம் கொண்ட, திணிவுடைய துணிக்கை
   b) ஏற்றமற்ற, திணிவுடைய துணிக்கை
   c) எதிரேற்றம் கொண்ட, திணிவற்ற துணிக்கை

ii. பொசுபரசு மூலகத்தின் குறியீடு $^{31}_{15}P$ ஆகும்.
   a) இதன் p, e, n எண்ணிக்கைகளை எழுதுக.
   b) இதன் இலத்திரன் நிலையமைப்பை எழுதுக, வலுவளவைக் குறிப்பிடுக.

iii. குளோரினுடைய அணுக்கள் $^{35}_{17}Cl$, $^{37}_{17}Cl$ எனும் இரு வகையாக உள்ளன.
   a) இவ்விரு அணுக்களும் எவ்வாறு அழைக்கப்படும்?
   b) இவ்விரு அணுக்களிற்குமிடையில் உள்ள ஒத்த இயல்புகள் இரண்டையும் வேறுபாடு ஒன்றையும் குறிப்பிடுக.
   c) மேற்படி இருவகை அணுக்களிலும் அதிக சதவீதத்தில் காணப்படுவது எது?

iv. அணுக் கட்டமைப்பு தொடர்பான இரதபோர்ட், நீல்போர் என்பவர்களின் மாதிரியுருவின் விடயங்களை குறிப்பிடுக.

விடைகள்

i. a) புரோத்தன் - p
   b) நியூத்திரன் - n
   c) இலத்திரன் - e

ii. a) p=15, e = 15, n = 16
   b) $^{31}_{15}P$ = 2, 8, 5, வலுவளவு = 3

iii. a) சமதானிகள்
   b) ஒத்த இயல்புகள்: அணுவெண் மாறாது. புரோத்தன், இலத்திரன் எண்ணிக்கை மாறாது. வேறுபட்ட இயல்பு: திணிவெண்
   c) $^{35}_{17}Cl$

iv. இரதபோர்ட்

❖ அணுவின் மத்தியில் நேரேற்றம் கொண்ட திணிவுடைய கரு உள்ளது.

❖ இலத்திரன்கள் சூரியனைச் சுற்றி கோள்கள் சுற்றுவதை ஒத்ததாக கருவைச் சுற்றுகின்றன.

நீல் போர்

❖ நேரேற்றம் பெற்ற கருவைச் சூழ குறித்த சக்தி மட்டங்களில் இலத்திரன்கள் காணப்படும்.

ஆவர்த்தன அட்டவணை

❖ மூலகங்களை அணுவெண், திணிவெண் அடிப்படையில் ஒழுங்குபடுத்தி அவற்றின் பல்வேறு இயல்புகளை ஆராயும்போது அவை ஓர் ஒழுங்கில் மாறுபடுவதைக் காணலாம்.

❖ வரிசையாக்கப்பட்ட மூலகங்களில்சம ஆயிடைகளில் குறித்த இயல்பு மீண்டும் மீண்டும் தோன்றுதல் ஆவர்த்தன இயல்பு எனப்படும்.

❖ ஆவர்த்தன அட்டவணை எனும் வடிவில் மூலகங்களை வகைப்படுத்தி அறிமுகப்படுத்தியவர் திமித்ரி மெண்டலீவ் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நவீன ஆவர்த்தன அட்டவணை அணுவெண் ஏறுவரிசைப்படி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

02. ஆவர்த்தன அட்டவணையின் ஒரு பகுதி கீழே காட்டப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டவை மூலகங்களின் உண்மையான குறியீடுகள் அல்ல. இவற்றைப் பயன்படுத்தி கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

A							A
C			D			E	
	F			G		H	I
J							

i. விழுமிய வாயுக்களாகக் காணப்படும் இரு மூல கங்களைக் குறிப்பிடுக.

ii. மேற்படி மூலகங்களில் 4 சக்தி மட்டங்களைக் கொண்ட மூலகத்தின் எழுத்தை எழுதுக.

iii. மிகவும் குறைவான முதலாம் அயனாக்க சக் தியைக் கொண்ட மூலகங்கள் இரண்டை எழு துக. அவற்றின் கூட்டம் எது?

iv. அயனாக்க சக்தியைக் குறிப்பிடும் அலகு எது?

v. முதலாம் அயனாக்க சக்தி எக்கூட்டத்திற்கு மிக உயர்வாகக் காணப்படும்?

vi. மூலகங்களின் மின்னெதிர்த் தன்மை என்றால் என்ன?

vii. மின்னெதிர்த் தன்மை மிகக் கூடுதலாகக் காணப் படும் மூலகங்களையும் அவற்றின் கூட்டத்தை யும் எழுதுக.

viii. மேற்படி மூலகங்களில் உலோகங்களாகக் காணப் படுபவை எவை?

ix. E, F எனும் மூலகங்கள் சேர்ந்து உருவாக்கும் சேர் வையின் சூத்திரத்தை எழுதுக.

விடைகள்

i. B, I

ii. J

iii. C, J - *1* ஆம் கூட்டம்

iv. KJ mol^{-1}

v. பூச்சியக் கூட்டம் or viii ஆம் கூட்டம்

vi. இன்னொரு மூலக அணுவெண்ணுடன் பிணைப் பில் ஈடுபட்டிருக்கும் ஒரு மூலக அணு பிணைப் புச் சோடி இலத்திரன்களைக் கவரும் ஆற்றல் மின்னெதிர்ப்புத் தன்மை எனப்படும்.

vii. E, H - vii ஆம் கூட்டம்

viii. C, F, J

ix. FE_2

மின்னின் வெப்ப விளைவு

❖ உயர் தடையைக் கொண்ட கடத்தியினூடாக மின்னோட்டம் பாயும்போது தடையின் காரண மாக இலத்திரன்கள் அதிர்வடைவதால் வெப்பம் பிறப்பிக்கப்படும். இதுவே மின்னின் வெப்ப விளைவு ஆகும்.

❖ மின்னின் வெப்ப விளைவு பின்வரும் 3 காரணி களில் தங்கியிருக்கும்.

1. மின்னோட்டத்தின் அளவு (I)
2. தடைத்திறன் அளவு (R)
3. மின்னோட்டம் பாயும் நேரம் (t)

❖ வெப்பவிளைவுபின்வரும்சமன்பாடுகளினால் கணிக்கப்படும்.

$$H = I^2Rt \qquad H = VI\ t \qquad H = \frac{V^2}{R}t$$

❖ மின்னின் இயக்க விளைவு பயன்படும் சாதனம் ஒன்றின் படம் கீழே காட்டப்பட்டுள்ளது.



i. இவ்வமைப்பின் பெயர் யாது?

ii. இதிலுள்ள A, B, C எனும் பகுதிகளின் பெயர் களை எழுதுக.

iii. A யில் X எனும் புள்ளியில் விசை எத்திசையில் உருவாகும்.

iv. மேற்படி விசை உருவாகும் திசையை கண்டறி யப் பயன்படுத்திய விதியை எழுதுக.

v. மின்காந்தத் தூண்டல் பயன்படும் சாதனங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

vi. மின்காந்தத் தூண்டல் தொடர்பான பரடேயின் விதியையும் லென்சின் விதியையும் எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vii. மின்காந்தத் தூண்டலின்போது உருவாகும் மின்னோட்டத்தின் திசையைக் கண்டறியப் பயன்படும் விதியின் பெயரை எழுதுக.

விடைகள்

i. மின்மோட்டார்
ii. A - சுழலும் கம்பிச்சுருள் / ஆமேச்சர்
B - தூரிகை
C - பிளவு வளையம்
iii. மேல்நோக்கிய திசையில்
iv. பிளெமிங்கின் இடக்கை விதி:

இடது கையின் முதல் 3 விரல்களையும் ஒன்றுக்கொன்று செங்குத்தாகப் பிடிக்க சுட்டுவிரல் காந்தப் புலத் திசையையும் நடுவிரல் மின்னோட்டத் திசையையும் குறித்தால் பெருவிரல் கடத்தியின் இயக்கத் திசையைக் குறிக்கும்.

v. தைனமோ (மின்பிறப்பாக்கி)
vi. பரடேயின் விதி:

தூண்டல் மின்னியக்க விசை கடத்தியில் ஏற்படும் காந்தப்பாய மாற்ற வீதத்திற்கு நேர் விகித சமனாகும்.

லென்சின் விதி:

தூண்டல் மின்னோட்டத் திசையானது அதனை ஏற்படுத்தும் மாற்றத்தை எதிர்க்கும் வகையில் அமையும்.

vii. பிளெமிங்கின் வலக்கை விதி

குர்ஆன் ஓதுவதின் சிறப்புக்கள்



''நீங்கள் குர்ஆனை ஓதுங்கள். நிச்சயமாக அது நாளை மறுமையில் அதை ஓதியவருக்கு பரிந்துரை செய்யும்'' என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்.

''குர்ஆனை ஓதி அதன்படி அமல் செய்தவரையும் குர்ஆனையும் நாளை மறுமையில் கொண்டு வரப்படும். குர்ஆனின் இரண்டு ஸூராக்கள் அல்பகரா, ஆலு இம்ரான் முன் வந்து அந்த இரண்டையும் ஓதியவருக்காக அல்லாஹ்விடத்தில் வாதாடும்'' என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

''உங்களில் சிறந்தவர் குர்ஆனைக் கற்று அதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்தவர்'' என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (அல்புஹாரி)

''குர்ஆனை உரிய முறையில் ஓதி அதன்படி செயற்பட்டவர் நாளை மறுமையில் சங்கையான உயர்ந்த மலக்குகளுடன் இருப்பார். கஷ்டப்பட்டு திக்கித் திக்கி ஓதுபவருக்கு இரண்டு மடங்கு கூலி கிடைக்கும்'' என நபியவர்கள் கூறினார்கள்.

(அல்புஹாரி, முஸ்லிம்)

''எவருடைய உள்ளத்தில் குர்ஆனின் சிறு பகுதியேனும் மனனமாக இல்லையோ அவருடைய உள்ளம் பாழடைந்த வீட்டைப் போன்றது'' என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (அத்திர்மிதி)

''அல்லாஹ்வுடைய வேதத்திலிருந்து (குர்ஆனிலிருந்து) ஓர் எழுத்தை ஓதுகின்றாரோ அவருக்கு ஒரு நன்மை கிடைக்கும். ஒரு நன்மை செய்தால் அது பத்து மடங்காக்கப்படும். அலிஃப்லாம்மீம் என்பது ஓர் எழுத்து என்று நான் சொல்ல மாட்டேன். அலிஃப் என்பது ஓர் எழுத்தாகும். லாம் என்பது ஓர் எழுத்தாகும். மீம் என்பது ஓர் எழுத்தாகும்'' என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். (அத்திர்மிதி)

ஏ.எப். இன்பா
தரம் 11
தி/ அந்நஹார் மகளிர் ம.வி.
மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவம், நீதி, நேர்மை:
இஸ்லாம் வழங்கிய சுதந்திரத்தின் பண்புகள்

— சிராஜுல் ஹஸன்

அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஆருயிர்த் தோழர்களில் ஒருவர் அபூதர் கிபாரி (ரழியல்லாஹு அன்ஹு). ஒருமுறை இவருக்கும் பிலால் அவர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. பிலால் எத்தியோப்பியாவைச் சேர்ந்தவர்; நீக்ரோ இனத்தவர்; கறுப்பு நிறத்தவர்; அடிமையாக இருந்து விடுதலை ஆனவர்.

வாக்குவாதத்தின் போது அபூதர் கிபாரி ஆத்திரம் மேலிட பிலால் அவர்களைப் பார்த்து, ''கறுப்பிக்குப் பிறந்த பயலே'' என்று சொல்லிவிட்டார். உடனே பிலால் அவர்கள்



இறைத்தூதரிடம் சென்று முறையிட்டார்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அபூதரை அழைத்து கண்டிப்பான குரலில் கூறினார்கள்:

''அபூதர்! பிலாலை அவருடைய தாயாரின் நிறத்தைச் சொல்லி கேலியாக அழைத்தீரா? பழைய மூடத்தனங்கள் இன்னும் உங்களிடம் இருந்து விலகவில்லையா? அதன் பாதிப்புகள் இன்னும் உங்களிடம் இருக்கின்றனவா? பிலால் உங்கள் சகோதரர்.''

அபூதர் தம் தவறை உணர்ந்தார். மனம் வருந்தினார். பிலாலிடம் வந்து,

''பிலாலே! உங்கள் கால்களை என் முகத்தில் வைத்து மிதியுங்கள்''

என்று கேட்டுக் கொண்டார்.

❖ ❖ ❖

நபிகளாரின் காலத்தில் மக்ஸூம் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண் திருட்டுக் குற்றம் புரிந்துவிட்டாள். குற்றம் நிரூபிக்கப்பட்டு அவள் தண்டனை பெறுவதும் உறுதியாகிவிட்டது. குறைஷிக் கோத்திரத்தினர் இதனை கௌரவப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டனர்.

''உயர் குடும்பத்தைச் சேர்ந்த பெண் தண்டிக்கப்படக் கூடாது; அவ்வாறு தண்டிக்கப்படுவது தங்களை அவமானப்படுத்துவது போலாகும்'' என்று கருதினர்.

குறைஷிகள் தங்களுக்குள் ஆலோசித்தனர்.

''இந்தப் பெண்ணுக்குத் தண்டனை வழங்காமல் இருக்கும்படி நம் சார்பாக யாரையேனும் அண்ணலாரிடம் தூது அனுப்பலாம்'' என்று தீர்மானித்தனர்.

உஸாமா இப்னு ஸைத் (ரழியல்லாஹு அன்ஹு) அண்ணலாரின் பேரன்பைப் பெற்ற அருமைத் தோழர் ஆவார்.

எனவே, குறைஷிகள் உஸாமாவைப் பெரிதும் வற்புறுத்தி தங்கள் சார்பாக அண்ணலாரிடம் பேசச் சொன்னார்கள்.

அவர்களின் வேண்டுகோளை ஏற்று உஸாமாவும் அண்ணலாரிடம் பேசினார். உஸாமாவின் பரிந்துரையைக் கேட்ட உடனேயே இறைத்தூதரின் முகம் மாறிவிட்டது. உணர்ச்சி பொங்கக் கூறினார்:

''உயர் தகுதியில் இருப்பவர்கள் தவறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தால் அவர்களை வெறுமனே விட்டுவிடுவது, சாதாரண மக்கள் தவறு செய்தால் அவர்களைத் தண்டிப்பது, இந்தப் போக்கின் காரணமாகத்தான் உங்களுக்கு முன் வாழ்ந்த சமுதாயங்கள் நாசம் அடைந்தன. நானும் அவ்வாறே செய்ய வேண்டுமா?''

இவ்வாறு கேட்ட நபியவர்கள் உறுதிபடக் கூறினார்கள்:

''முஹம்மதின் மகள் ஃபாத்திமா திருடியிருந்தாலும் கூட நான் அவளின் கைகளைத் துண்டிப்பேன், நிச்சயம்''

❖ ❖ ❖

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்குப் பிறகு முதல் கலீஃபாவாக ஆட்சிப் பொறுப்பேற்ற அபூபக்கர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மக்களை நோக்கிக் கூறினார்கள்:

''மக்களே, உங்களுக்குத் தலைமை தாங்கும் பெறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உங்கள் எல்லோரையும் விட நான் உயர்ந்தவன் என்பதால் அல்ல.''

''நான் நல்லது செய்யும்போது எனக்கு ஒத்துழைப்பு தாருங்கள். தவறு நிகழ்ந்துவிட்டால் திருத்துங்கள். உங்களில் பலவீனமானவர் என்னிடம் பலசாலி ஆவார். அதாவது, அவருடைய மறுக்கப்பட்ட உரிமைகளை நான் வலிமையைப் பயன்படுத்திப் பெற்றுத் தருவேன்.''

''உங்களில் பலசாலி என்னிடத்தில் பலவீனமானவரே. அவரிடமுள்ள மற்றவர்களின் உரிமைகளைப் பறித்தெடுத்து உரியவர்களுக்கு அளிப்பேன்.''

''சத்திய வழியிலான போராட்டத்தைக் கைவிடாதீர்கள். அதர்மத்திற்கு அடிபணிபவர்களை அல்லாஹ் நிலைகுலையச் செய்துவிடுவான்.''

''இறைவனுக்கும் இறைத்தூதருக்கும் நான் கீழ்ப்படியும் வரை எனக்கு நீங்கள் கீழ்ப்படியுங்கள். இறைவனுக்கும் இறைத்தூதருக்கும் நான் கீழ்ப்படியவில்லை என்றால் அப்பொழுது நீங்கள் கீழ்ப்படியாதீர்கள்.''

❖ ❖ ❖

ரோமாபுரி இராணுவத்தின் பிரதிநிதியான ஜோர்ஜ், முஸ்லிம் இராணுவத் தளபதியுடன் பேச வந்தார். அப்போது தளபதி அபூ உபைதா தரையில் அமர்ந்திருந்தார். அவரும் சாதாரண படை வீரர் போலத்தான் இருந்தார்.

''உங்கள் தளபதி எங்கே?'' என்று விசாரித்தார் ஜோர்ஜ்.

வீரர்கள் உபைதாவைக் காட்டினார்கள். ஜோர்ஜுக்கு நம்பிக்கை வரவில்லை. படைத் தளபதிக்குரிய பதவிச் சின்னங்களோ, சிறப்பாக அமைக்கப்பட்ட தனி இருப்பிடமோ இல்லையாதலால் அவர் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார்.

''தரையில் அமர்ந்திருக்கும் அவர்தான் எங்கள் தளபதி'' என்று பதில் வந்தது.

ஜோர்ஜ் வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டார்.

''இவரா உங்கள் தளபதி! எங்களுடைய அடிமைகள் கூட இவ்வளவு மோசமான நிலையில் இருக்க மாட்டார்கள்.''

இது கேட்ட அபூ உபைதா கூறினார்கள்:

''நாங்கள் எல்லாரும் சமமானவர்கள். இங்கு ஆண்டான்-அடிமை என்ற வித்தியாசமில்லை. எல்லாரும் இறைவனின் அடிமைகளே. அது மட்டுமல்ல, உரிமைகளிலும் சம வாய்ப்பு உள்ளவர்களே!''

ஜோர்ஜ் திகைத்து நின்றார். அவர் மட்டுமல்ல, இந்தச் சமத்துவம் கண்டு சரித்திரமே திகைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஃவாப் பணியில்
எழுத்துத்துறை



இன்று உலகம் எப்போதுமில்லாதவாறு கல்வித் துறையில் முன்னேற்றமடைந்துள்ளது. எங்கும் ஏடுகளும் எழுத்துக்களும் ஏராளமாக கிடைக்கின்றன. இவ்வேளை, நிம்மதியற்ற உலக வாழ்க்கைக்கே தன்னை அர்ப்பணிக்கும் மனிதன், மார்க்க விளக்கவுரைகளை கேட்டு விளங்கி உளத்தூய்மையடைய நேரமில்லையென ஏங்குகின்றான். நேரம் கிடைத்தாலும் சிலருக்கு வாய்ப்பு கிடைப்பதில்லை. ஒரு சில வேளைகளில் பள்ளிவாசல்களில் பேருரைகள் நிகழ்த்தப்பட்டாலும் அந்நேரத்தில் வாய்ப்பில்லையென வராதிருந்து விடுகின்றனர். சிலர் ஜுமுஆ நாட்களில் கூட பள்ளியில் நிகழ்த்தப்படும் பேருரைகளை ஆரம்பம் முதல் இறுதி வரை கேட்டு படிப்பினை பெறுவதில்லை. இது இவ்வாறிருக்க, அந்நிய மதத்தினர்களுக்கு எமது புனித இஸ்லாமிய அழைப்பை பகிரங்கமாக எடுத்துக் கூறவும் முடியாத இக்கட்டான சூழ்நிலையில் முஸ்லிம்கள் இருந்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில், இஸ்லாமிய நற்போதனைகள் பொதிந்த ஏடுகள், அதன் யதார்த்த தன்மையை விளக்கும் புத்தகங்கள், சஞ்சிகைகள் இப்புனித பணியை சிறப்பாக ஆற்ற முடியும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. கடந்த கால, நிகழ் கால அனுபவங்கள் இதை நிரூபிக்கின்றன. அந்நியர்கள் இஸ்லாத்தை ஏற்றுள்ளார்கள் என்பதை நாம் அறிய முடிகிறது. இன்று மட்டுமல்ல, இஸ்லாத்தின் ஆரம்ப காலம் முதல் இன்று வரைக்கும் எழுத்துத்துறை தஃவாப் பணிக்கு போதிய தொண்டாற்றியுள்ளதென்பதை

முத்திரை பதிக்கப்பட்ட அழைப்பொன்றை ஹபஸா நாட்டு மன்னர் நஜ்ஜாஸிக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். இவ்வாறே மிஸ்ருக்கும், இஸ்கந்தருக்கும் அரசனை ஜரீஜ் பின் மத்தா என்ற முகவ்கிஸ் மன்னருக்கும் அனுப்பி இருக்கிறார்கள். மன்னர் கிஸ்ரு என்பவருக்கும், ரோம் தேச மன்னர் ஹிரகலுக்கும், பஹ்ரைன் நீதிபதிக்கும் இவ்வாறு பல மன்னர்களுக்கும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கடிதங்கள் மூலம் இஸ்லாத்தை ஏற்குமாறு பணித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய
வரலாறு சான்று
பகர்கின்றது.
ரஸூல்
(ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம்)
அவர்களின் காலத்தில் பெரும்
பெரும் சாம்ராஜ்யங்களின்
மன்னர்களுக்கு ரஸூலுல்லாஹ்

எழுத்து மூலம் இஸ்லாத்தை எத்தி வைத்துள்ளார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரி 6 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலே ஹுதைபியா உடன்படிக்கையை முடித்துத் திரும்பியதும் பல அரசர்களுக்கு இஸ்லாத்தை ஏற்குமாறு கடிதம் எழுதினார்கள். அப்போது நபித்தோழர்களில் சிலர் முத்திரை பதிக்கப்படாத கடிதங்களை அரசர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் எனக் கூறினார்கள். எனவே, நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ''முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்'' என்ற வாசகத்தை வெள்ளியினாலான ஒரு மோதிரத்தில் பதித்து எடுத்தார்கள். அம்முத்திரை 3 வரிகளிலே பதிக்கப்பட்டிருந்தது. ''முஹம்மத்'' என ஒரு வரியிலும் ''ரஹூல்'' என ஒரு வரியிலும் ''அல்லாஹ்'' என ஒரு வரியிலும் ஆகும். (ஆதாரம் புஹாரி, 2 ஆம் பாகம் 872, 873)

இவ்வாறு முத்திரை பதிக்கப்பட்ட அழைப்பொன்றை ஹபஸா நாட்டு மன்னர் நஜ்ஜாஸிக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். இவ்வாறே மிஸ்ருக்கும், இஸ்கந்தருக்கும் அரசனை ஜரீஜ் பின் மத்தா என்ற முகவ்கிஸ் மன்னருக்கும் அனுப்பி இருக்கிறார்கள். மன்னர் கிஸ்ரு என்பவருக்கும், ரோம் தேச மன்னர் ஹிரகலுக்கும், பஹ்ரைன் நீதிபதிக்கும் இவ்வாறு பல மன்னர்களுக்கும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கடிதங்கள் மூலம் இஸ்லாத்தை ஏற்குமாறு பணித்தார்கள்.

இன்னும், அபூபக்ர் சித்தீக் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட சில தீய சக்திகளின் காரணமாக ஹாபிழ்களின் மனதிலே பதியப்பட்டிருக்கும் குர்ஆனும், தோல், எலும்பு, ஏடு என்பவற்றில் எழுதப்பட்டிருக்கும் குர்ஆனும் கைதவறிப் போய்விடும் என்ற அச்சம் ஏற்பட்டது. ஆகவே, குர்ஆனை ஒன்று திரட்டி எழுத வேண்டும் என்று கூறப்பட்டபோது உமர் (ரழியல்லாஹு அன்ஹு) வின் கருத்தை அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆரம்பத்தில் மறுத்தாலும் பின்னர் ஏற்று குர்ஆன் எழுத்துருவில் ஒன்று திரட்டப்பட வேண்டுமென்ற எண்ணத்தில் ரஸூலுல்லாஹ்வின் காலத்தில் குர்ஆனை எழுதியவரான ஸைத் பின் தாபித் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இறுதியாக உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் காலத்தில் இப்புனித குர்ஆன் ஒன்று திரட்டப்பட்டு இன்று எல்லா இடங்களிலும் அதே புனிதத் தன்மையுடன் கிடைக்கப் பெறுகிறது.

எனவே, எழுத்துத்துறை இஸ்லாமிய தஃவாப் பணியில் எண்ணற்ற பல சாதனைகளை நிலை நாட்டியுள்ளது என்பதை எவராலும் மறுக்க முடியாது. இப்பணியை நாமும் தொடர வேண்டும்.

ராபி ரயீஸா நுஸ்ரத்
5 ஆம் வருடம்
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க
ஓட்டமாவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சரம்

வாழ்க்கைச் சுவடு

ரோஜா இதழ்கள் தூவப்பட்ட
பாதையல்ல எம் வாழ்க்கை
கற்களும் முட்களும் நிறைந்த
கரடுமுரடான பாதை அது...

வெற்றிகள் மட்டும்தான்
வாழ்க்கையென்றிருந்தால்
தோல்வியின் வலிகளை
யார் உணர்வது?

உள்ளம் உடையும்போது
சத்தங்கள் கேட்பதில்லை
என்பதால் அங்கு வலிகள்
உணரப்படுவதில்லை என்றாகிவிடுமா?

புன்னகையின் சிதறல்களின்
வெளிப்பாடாய் மட்டும் எம்
வாழ்க்கை அமைவதில்லை

கண்ணீர்த் துளிகளின்
ரணங்களாகவும் எம்
வாழ்க்கை அமையலாம்
என்பதை மனதிற் கொண்டு
நாமும் வாழ்ந்து
பிறரையும் வாழவைப்போம்

சப்னா ஜெய்னுல் ஆப்தீன்
ஹாமியா ஆயிஷா ஸித்திக்கா

நிலா

வெண் என்று உன்னை
புலவர்கள் சொல்வதால்
பெருமை வந்து
கோவை போன்ற உன் முகத்தை
ஏன் சோலையில்
மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறாய்?

வீதி எல்லாம் சுற்றித் திரிபவனே
நீ வருவாய் என
வாயில் அருகே காத்திருந்தேன்
ஆனால் நீ என்னை
ஏமாற்றி விட்டு சென்று விட்டாய்
பின்புதான் நான் அறிந்து கொண்டேன்
இன்று அம்மாவாசை என்று

எம்.என். நஜீபா
பு/கல்/ கொய்யவாடி பெண்கள் ம.வி.
நுரைச்சோலை

நட்பு தொடர

விடியலை நோக்கிய பட்சிகளாய்
நானும் என் தோழிகளும்
பள்ளி பயணத்தை கடந்து
ஒரே இலட்சிய பாதையில்
பயணிக்க ஆரம்பிக்கின்றோம்

கண்ணீருடன் உதிரும் – வேதனைகள்
கவலைகள் சேர்க்கும் – சோதனைகள்
மனதில் உறைகின்ற – சந்தோஷங்கள்
மறக்க முடியாத – சிரிப்புகள்

எத்தனை எத்தனை வந்தாலும்
அத்தனையிலும் நாம்
ஒன்றாய் பங்கேற்போம் – என
மனதில் உறுதி மொழி
எடுத்துக் கொண்டோம்

இன்று இணைந்து கொண்ட
நம் நட்பு
களங்கமின்றி கவிதையால்
தொடர்ந்திருக்க
எழுதுகிறேன் ஒரு மடல்...

எம்.எஸ். ஆயிஷா ஹானிம்
வெலம்பொட மு.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான தொழிலாளர்களுக்குக் கோடிடுக.

1.
   i. சிற்பி
   ii. ஓவியன்
   iii. கொல்லன்

2.
   i. சிற்பி
   ii. ஓவியன்
   iii. குயவன்

3.
   i. மேசன்
   ii. தச்சன்
   iii. பொற்கொல்லன்

4.
   i. கொல்லன்
   ii. பொற்கொல்லன்
   iii. வியாபாரி

5.
   i. வலவன்
   ii. சாரதி
   iii. மீகாமன்

பின்வரும் வாக்கியங்களுக்கு முடிக்கும் சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.

(இயற்றுவர், வேண்டும், நீட்டுவோம், தரும், படைத்தவன்)

6. நாம் சுத்தமான ஆடைகளையே அணிய ....
7. உண்மை உயர்வு ....
8. கவிஞர்கள் பாடல்களை ....
9. பாரி தாராள மனம் ....
10. நாம் எளியவர்களுக்கு நேசக்கரம் ....

வித்தியாசமான சொற்களுக்கு கோடிடுக.

11. இரை, ஊண், ஊன், உணவு
12. மேனி, மெய், உடல், அவயம்
13. கோயில், குளம், மூக்கு, ஆலயம்
14. கோபம், ஓடுதல், முக்கோணம், நீலம்
15. ஆசிரியர்கள், மாணாக்கன், உழவன், தந்தை

பின்வரும் வாக்கியங்களுள் பிழையான வாக்கியத்திற்கு கோடிடுக.

16.

i. கள்வனை நாய் ஓட ஓட துரத்தியது.

ii. வடையை மேலே மேலே சாப்பிட்டேன்.

iii. ரொட்டி சுடச்சுட காணப்பட்டது.

17.

i. தாய் மகனுக்கு அசைத்து அசைத்து கதை கூறினாள்.

ii. தாய் திருமண வீட்டில் விடிய விடிய வேலை செய்தாள்.

iii. கழுகு மேலே மேலே பறந்தது.

பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் செயற்படுபொருளுக்குக் கோடிடுக.

18. நாங்கள் உண்மையைச் சொல்வோம்.
19. உழவன் வயலை உழுதான்.
20. சிறுவர்களை ஆசிரியர்கள் பாராட்டினர்.

இங்கு தரப்பட்டுள்ள விலைச் சுட்டியை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பொருள்	ரூபா
மா 2 Kg	240.00
கடலை 250 g	40.00
அரிசி 750 g	75.00
தேயிலை 100 g	20.00

	பொருள்	ரூபா
21.	தேயிலை 1 Kg	....
22.	அரிசி 2 Kg	....
23.	கடலை 750 g	....
24.	மா 500 g	....
25.	மொத்த விலை	....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. 132 இன் குவியலை எத்தனை நான்கின் குவியலாக வகுக்கலாம்?

27. வருடத்தில் 31 நாட்களை கொண்ட மாதங்கள் எத்தனை?

பின்வரும் எண்களில்
7177, 7707, 7077, 7070, 7007

28. மிகப் பெரிய எண் எது?

29. மிகச் சிறிய எண் எது?

30. இவ்வெண்களை ஏறுவரிசைப்படுத்தினால் கடைசியாக வரும் எண் யாது?

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

31. உணவை கிழித்து உண்பதற்கு ஏற்ற அலகுகளைக் கொண்ட பறவை எது?

i. மீன்கொத்தி ii. நீர்க்காகம்
iii. புறா iv. பருந்து

32. பின்வருவனவற்றுள் எது ஓர் ஊனுண்ணியாகும்?

i. பல்லி ii. முயல்
iii. காகம் iv. மான்

33. பின்வரும் பூக்களில் தேனைக் கொண்டிராத பூ எது?

i. வாழைப்பூ ii. முருங்கைப்பூ
iii. கடதாசிப்பூ

34. பின்வரும் பூக்களில் எது ஊதா நிறப் பூவாகும்?

i. மல்லிகைப்பூ ii. பூசணி பூ
iii. எருக்கலைப் பூ iv. முல்லைப் பூ

கீழ்வரும் படங்களின் குறியீட்டின் கருத்தை தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

35.

i. இலங்கை நீர்வடிகால் சபை

ii. பெற்றோலிய கூட்டுத்தாபனம்

iii. மகாவலி நிலையம்

36.

i. இலங்கை மின்சார சபை

ii. பெற்றோலிய கூட்டுத்தாபனம்

iii. இலங்கை மரக் கூட்டுத்தாபனம்

37.

i. சிற்றுண்டிச்சாலை

ii. மகாவலி நிலையம்

iii. மலசலகூடம்

38. ஒரே குடும்பத்தைச் சார்ந்த விலங்குக் கூட்டம் எது?

i. புலி, சிறுத்தை, சிங்கம்
ii. யானை, மான், மரை
iii. முயல், மயில், குயில்

39. காற்றுக் கருவிகளில் ஒன்று

i. நாதஸ்வரம் ii. மேளம்
iii. வயலின்

40. தோற் கருவிகளில் ஒன்று

i. வயலின் ii. புல்லாங்குழல்
iii. மேளம்

41. வித்துக்களை அகற்றிய பின் உணவாக உண்ணும் பழம் எது?

i. பலா ii. அப்பிள்
iii. வாழை iv. கொய்யா

42. இலங்கையில் அதிகளவு குளங்களைக் கொண்ட மாகாணம் எது?

i. வடமத்திய மாகாணம்
ii. தென் மாகாணம்
iii. வட மாகாணம்

43. மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற நகரங்கள் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளன?

i. வட மாகாணம் ii. மேல் மாகாணம்
iii. தென் மாகாணம்

44. இலங்கையின் சுதந்திரத்திற்காக உழைத்தவர்களில் ஒருவர்.

i. ஆர். பிரேமதாச
ii. மஹிந்த ராஜபக்ஷ
iii. சந்திரிகா குமாரதுங்க
iv. ஆனந்த குமாரசுவாமி

45. சிலாபம், குருணாகல், புத்தளம் ஆகிய நகரங்கள் எந்த மாகாணத்தில் அமைந்துள்ளன?

i. மத்திய மாகாணம்
ii. வடமேல் மாகாணம்
iii. மேல் மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் வசனங்களை ஒழுங்கமைக்க நடுவில் வரும் வசனத்திற்கு அடையாளமிடுக.

46.

i. தான் பெற்ற மகனுக்கு இக்கதி நேர்ந்து விட்டதே என சரஸ்வதி துயருற்றாள்.

ii. பாலகுமாரன் சரஸ்வதியின் ஒரே ஒரு புத்திரன்.

iii. இதனால் ஒரு நாள் நாதியற்ற பிணமாக வீதியில் கிடந்தான்.

iv. கூடாத சகவாசமும் தீயவர்களுமே அவனது நண்பர்கள்.

v. நண்பர்களுடன் சேர்ந்து சூது, கொள்ளை போன்ற தீய செயல்களில் ஈடுபட்டான்.

அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லை இடைவெளியில் எழுதுக.

47. .... நாடுகளில் 48. .... வீழ்ச்சி அதிகரித்து காணப்பட்டது. (மழை, மலை)

49. .... களை காட்டுக்குள் துரத்திவிடுமாறு அரசன் 50. .... பிறப்பித்தான். (யானை, ஆணை)

விடைகள்

1. ஓவியன்
2. சிற்பி
3. தச்சன்
4. பொற்கொல்லன்
5. சாரதி
6. வேண்டும்
7. தரும்
8. இயற்றுவர்
9. படைத்தவன்
10. நீட்டுவோம்
11. ஊன்
12. அவயம்
13. மூக்கு
14. ஓடுதல்
15. ஆசிரியர்கள்
16. ii
17. i
18. உண்மையைச்
19. வயலை
20. சிறுவர்களை
21. 200.00
22. 200.00
23. 120.00
24. 60.00
25. 580.00
26. 33
27. 7
28. 7707
29. 7007
30. 7707
31. iv
32. i
33. iii
34. iii
35. ii
36. i
37. i
38. i
39. i
40. iii
41. i
42. i
43. iii
44. iv
45. ii
46. v
47. மலை
48. மழை
49. யானை
50. ஆணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

பின்வரும் பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறாள்

1. பாடலில் இடம்பெற்ற பெண்பால் வினைச் சொல்?
   i. குறத்தி ii. நடிக்கிறாள்
   iii. களிக்கிறான்

2. வேடன் என்பதன் எதிர்ப்பாற் சொல்?
   i. வேடி ii. வேடள்
   iii. வேட்டுவிச்சி

3. பாடலில் இடம்பெறாத உயர்திணைச் சொல்?
   i. குறவன் ii. குறத்தி
   iii. வேடன்

4. கூத்து என்பதன் சமனான பதம்?
   i. உரை ii. அழகு
   iii. நடனம்

5. பாடலில் இடம்பெற்ற பறவையின் ஒலிமரபு
   i. அகவும் ii. கரையும்
   iii. குதித்து

பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

6. புலியின் .... நீளமானது. (வாள், வால்)
7. குமரன் .... மாதத்தில் பிறந்தவன். (ஆனி, ஆணி)
8. .... வேகமாக ஓடும். (பறி, பரி)
9. பீமன் .... வாய்ந்தவன். (பலம், பழம்)
10. .... காட்டில் வாழும். (மரை, மறை)

பின்வரும் உருவினால் ஏற்படுவது?

11.
    வாந்திபேதி, மலேரியா

12. 
    வாந்திபேதி, ஆனைக்கால்

13. 
    பிளெக்நோய், தடிமன்

பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

14. மம கிரி பொனவா ....
15. ஒயா கௌத ....
16. 24 பேனைகளிலிருந்து 3/4 ஐ விற்ற பின்னர் எஞ்சி இருக்கும் பேனைகளின் எண்ணிக்கை யாது?
17. உதைப்பந்தாட்ட போட்டியொன்று பிற்பகல் 3.45 மணிக்கு ஆரம்பித்து அது 90 நிமிடங்களுக்குப் பின்னர் முடிவடைந்தது. முடிவடைந்த நேரத்தை நியம நேரத்தில் எழுதுக?
18. இரு பகுதிகளும் சமமாக இருக்கும் நிரையை தெரிவு செய்க.
    i. ONEDAY - DAYONE
    ii. 747353 - 547363
    iii. 3XY7YE - 7EYXY3

எண்கோலத்தை அவதானித்து வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்ணை எழுதுக.

19. 

    i. 26 ii. 28 iii. 30

20. 

    i. 56 ii. 62 iii. 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பின்வருவனவற்றின் நீட்டல் அளவைகளை ஏறு வரிசையில் எழுதினால் பெறக்கூடிய ஒழுங்கு முறையை தெரிவு செய்க.

22. ரூ 7541.83 ஐக் குறியீடுகளில் R. CFAD.OB எனக் காட்டப்பட்டுள்ளது எனின், ரூ. 7853.44 ஐ எவ்வாறு காட்டலாம்?

i. R. CABO.FF ii. R. CFAD.OB
iii. R. CBFO.AA

200 m ஓட்டப்போட்டி ஒன்றில் ஐந்து பேர் கலந்து கொண்டு அவர்கள் போட்டியை முடித்துக் கொண்ட நேரம் பின்வருமாறு:

1. அமிர் 16.55 செக்கன்
2. அமலன் 19.00 செக்கன்
3. அக்பர் 16.51 செக்கன்
4. விமலன் 15.91 செக்கன்

23. இவ் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்?

24. இவ் ஓட்டப்போட்டியில் இறுதியாக வந்தவர்?

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

25. கொழுப்புச் சத்து அதிகளவு உள்ள பொருள் எது?

i. பாண் ii. கருவாடு
iii. நெத்தலி iv. வெண்ணெய்

26. பின்வரும் பொருட்களுள் எது அமிலத் தன்மை யானது?

i. உப்பு ii. மிளகாய்
iii. தேசிக்காய் iv. வெங்காயம்

27. தண்டு வேர்கள் நடுவதன் மூலம் கன்றுகள் பெறப்படத்தக்க தாவரம்

i. மா ii. தேக்கு
iii. மரமுந்திரிகை iv. பப்பாசி

28. ஒருவர் வாகன அத்தாட்சிப் பத்திரம் பெறச் செல்ல வேண்டிய இடம் எது?

i. பொலிஸ் நிலையம்
ii. பிரதேச செயலகம்
iii. பிரதேச சபை

29. அதிகம் உஷ்ணமான காலங்களில் உண்ணும் பழவகை எது?

i. அன்னாசி ii. மாம்பழம்
iii. வத்தகப்பழம் iv. பலாப்பழம்

30. பிரசித்திபெற்ற பேராதனை தாவரவியற் பூங்கா எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?

i. மத்திய மாகாணம்
ii. ஊவா மாகாணம்
iii. மேல் மாகாணம்

31. சரித்திரப் புகழ் பெற்ற கதிர்காமம் எந்த நதிக்கு அருகில் அமைந்துள்ளது?

i. மாணிக்க கங்கை
ii. களனி கங்கை
iii. வளவ கங்கை

கீழ்வரும் அட்டவணையை அவதானித்து கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

யாழ்ப்பாணம்	இரத்தினபுரி	ஆமை
தாலாட்டுப் பாடல்	அரசாங்க அதிபர்	கொழும்பு
ஆளுநர்	வட்டவளை	கும்பிப் பாடல்
நத்தை	கீரை வகைகள்	கிழங்குகள்
தலைப்புச் செய்தி	உள்நாட்டுச் செய்தி	பிரதமர்

32. தொலைக்காட்சியில் வாசிக்கப்படும் போது முதலில் வாசிப்பது?

33. சனத்தொகை கூடிய சிறிய மாவட்டம்?

34. இலங்கையில் அதிகூடிய மழைவீழ்ச்சியுள்ள இடம்?

35. மாகாண சபை நிருவாகத்திற்கு பொறுப்பானவர்?

36. மாவட்டத்திற்கு பொறுப்பானவர்?

37. மிக வேகமாக ஊர்ந்து செல்லும் பிராணி?

38. மழைக் காலங்களில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படும் நகரம்?

39. இரும்புச் சத்து கூடுதலாக உள்ள உணவு?

40. குழந்தை ஒன்றை நித்திரை கொள்ளச் செய்ய பாடப்படும் பாடல்?

41. இலங்கையில் அதிகூடிய மழைவீழ்ச்சியுள்ள இடம்?

42. ஆழமான கிணற்றில் இருந்து நீரை இலகுவாக அள்ளுவதற்கு பயன்படுத்தும் கருவி?

i. கம்பி
ii. சாய்தளம்
iii. வாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. பெருந்தோட்டப் பயிர் வகைகளுள் அடங்குவது எது?

i. நெல் ii. தெங்கு
iii. புகையிலை iv. சோளம்

44. அளத்தல் கருவி அல்லாதது எது?

i. மீற்றர் கோல் ii. தராசு
iii. வெப்பமானி iv. காற்றாடி

45. நீரில் மிதக்கும் வித்து எது?

i. தாமரை ii. தேங்காய்
iii. நெல் iv. பலா

46. பின்வருவனற்றுள் அளவில் மிகச் சிறிய வித்து எது?

i. பயறு ii. கடுகு
iii. தூரியம் iv. பப்பாசி

47. பின்வருவனவற்றுள் கொடி வகையைச் சார்ந்த தாவரம் எது?

i. ஆமணக்கு ii. அகத்தி
iii. கோவா iv. மரமஞ்சள்

பின்வரும் ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

48. This is My Book ....

49. That is your Pencil ....

பின்வரும் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக.

50. மீன்கள் - பெரிய - மீன்தொட்டியில் - ஓடித் - அழகான - திரிந்தன

51. எது - செய்த - உபகாரம் - போன்றது - நல்லார்க்குச்

பின்வரும் சொற்களுக்கு இளமைப் பெயர்களை எழுதுக.

52. மீன் ....

53. பனை ....

54. கோழி ....

55. மா ....

பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தற் குறிகளை உரிய இடங்களில் இடுக.

56. நீ எங்கே சென்றாய்

57. கரடி புலி சிங்கம் போன்றன கொடிய மிருகங்களாகும்

58. சாந்தி கீழே பார்த்தாள்

''எனது உயிர்த்தோழன் ரமேஷ்'' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

விடைகள்

1. ii
2. iii
3. i
4. iii
5. i
6. வால்
7. ஆனி
8. பரி
9. பலம்
10. மரை
11. மலேரியா
12. வாந்திபேதி
13. பிளெக்நோய்
14. நான் பால் குடிக்கிறேன்.
15. நீ யார்?
16. 6
17. 17:15 மணி
18. iii
19. i
20. iii
21. iii
22. iii
23. விமலன்
24. அமலன்
25. iv
26. iii
27. ii
28. ii
29. iii
30. i
31. i
32. தலைப்புச் செய்தி
33. கொழும்பு
34. வட்டவளை
35. ஆளுநர்
36. அரசாங்க அதிபர்
37. நத்தை
38. இரத்தினபுரி
39. கீரை வகைகள்
40. தாலாட்டுப் பாடல்
41. வட்டவளை
42. i
43. ii
44. iv
45. ii
46. ii
47. iv
48. இது எனது புத்தகம்.
49. அது உனது பென்சில்.
50. அழகான மீன்கள் பெரிய மீன்தொட்டியில் ஓடித்திரிந்தன.
51. நல்லார்க்குச் செய்த உபகாரம் எது போன்றது.
52. குஞ்சு
53. வடலி
54. குஞ்சு
55. கன்று
56. ?
57. , , , .
58. .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இணையதளங்கள்

ALHASANATH
www.alhasanath.lk

ENGAL THESAM
www.engalthesam.lk

AHARAM
www.aharam.lk

PRABODAYA
www.prabodaya.lk

JUST MEDIA FOUNDATION

77, DEMATAGODA ROAD, COLOMBO 09, SRI LANKA
Tel: 2698771 / email: jmflanka@gmail.com / fb.com/jmfsrlanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 1-5 வரையிலான மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட எமது வெளியீடுகள்









புதிய நூல்களின் விபரம் உங்களது கைத்தொலைபேசிக்கு உடனுக்குடன் வந்தடைய f<space>ibhbooks என type செய்து 40404 க்கு அனுப்புங்கள்.

IBH Publication
Like

எமது நிறுவனத்தின் வெளியீடுகள்....

- மாணவர்களின் அடைவு மட்டத்தை அளக்கக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- ஆசிரியர்களும் பெற்றோர்களும் இலகுவாக பிள்ளைகளுக்கு வழிகாட்டக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டல் முழுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளன.
- ஆசிரியர் அறிவுரைப்பில் தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை அடைந்து கொள்ள ஏதுவான விதத்தில் பாடநூல் அலகுகள் முழுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளன.
- மாணவர்கள் சுயமாகவே கற்கும் விதத்தில் புத்தகங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஏ.எஸ். ஜௌபர்:
1. சுற்றாடல் (தரம் 1-5 வரை)
2. பரீட்சை வழிகாட்டி (தரம் 1-4 வரை)
3. தமிழ் (தரம் - 3-5 வரை)
4. கணிதம் (தரம் - 3-5 வரை)
5. அறிவுச்சாகரம்
6. மொழி ஆரம்
7. நந்தவனம் (மாதிரி வினாத்தாள்) தரம் 4-5 வரை

முஹிடீன் ரஜா:
1. தமிழ் (1 - உயர்தரம் வரை)
2. 4-8 வயது மாணவர்களுக்கான கதைத் தொகுதி
   * வாத்துவாணி
   * யார் பெரியவர்
   * ஸ்நோ வைற்றும் ஏழு சித்திரக் குள்ளர்களும்
   * விலங்குகள் சொல்லும் விந்தைக் கதை
   * கூலகப்பயால் கொத்தப்பட்ட சிறுவன்

பீ. யோகேஸ்வரன்:
* My English Teacher (Grade 3-4)

எம்.எம்.எம். அஸாம்:
* இஸ்லாம் - தரம் - 1-8 வரை

பீ. உமாசங்கர்:
* சிறுவர்களுக்கான பொது அறிவு

எம்.என்.எம். இம்ரான்:
1. பாலர் கணித வழிகாட்டி (தரம் 1-2)
2. முன்பள்ளி இலகு பாலர் தமிழ் வழிகாட்டி (தரம் -1)

கே. எம்.எம். லாபிர்:
* English Class Work Book (Grade 1-5)

டீ. நிஸாம் முஹம்மட்:
* மொழிப் பேழை (தரம் 3-5)

மனோ- சுரேஷ்:
1. புலமைப் பூக்கள் (தரம் - 5)
2. புலமைச் சிட்டுக்கள் (தரம் - 5)
3. புலமை முரசு (தரம் - 3)
4. புலமை விருந்து (தரம் - 4)

பீ. அம்பிகைபாகன்:
* இலகுவழிப் புலமைப் பரீட்சை வழிகாட்டி (தரம் -5)

செ. திலக்:
* கணிதம் செயல்நூல் (தரம் - 5)

எம். கே. நஜிபுல்லா:
* கணிதம் (தரம் 1-5)

ஏ.ஜே.ஜே. ஜவான்:
* இரண்டாம் மொழி சிங்களம் (தரம் 1-5)

ஏ. ஜே.ஏ. ஹகம்:
* இரண்டாம் மொழி சிங்களம் (தரம் 3-4)

இஸ்லாமிக் புக் ஹவுஸ்
77, தெமடகொட வீதி, கொழும்பு 09
தொலைபேசி: 011 2684851, 011 2669197
பெக்ஸ்: 011 2688102
இணையம்: www.ibh.lk

Like
IBH Publication

IBH PUBLICATION
77, Dematagoda Road, Colombo - 09 Tel: 0115 736098, 077 2518641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org